بسم الله الرحمن الرحيم

அல்கலாம்

AL-KALAM

பததிராதிபா —கூ அ அபதுல மஜீத

வாலயூம 3	1926ஹு ஏபரலமீ	பகுதி 4

சிறபபுறற ரமலான மாதம

(மௌலானா அபுலகலாம ஆஜாத அவாகளெழுதியது)

கொாகை அனுஷடானம ஆகியவைகளுககும, அலலாஹுத ஆலாவுககும உளள சமமநததைதப பொருததது, குாஆனஷாீபானது மனிதாகளை மூனறு பிரிவாக வகுததிருககினறது

அமமூனறு வகுபபுகளுள ஒனறு அலலாஹுதஆலாவின கட டளைகளை உதாசீனம செயது தன மீேத அநியாயததைப புரிநது கொளளுகினறது மறறொரு வகுபபு மததிய நிலையில இருககினறது மூனறாவது வகுபபு அலலாஹுதஆலாவின உததிரவுககுடபடடு நறகாரியஙகளைப புரிவதில முமமுரமாக விருககினறது மூனறாவது வகுபபின நிலை அலலாஹுத ஆலாவின மகாபெரும நடனததிறகு உரியதாகும இததகையதயாளததை அலலாஹுத ஆலாதன கலபியாாகடகு (மடடும) புரிகினறான (அலகுா ஆனின வியாககியானம).

மனிதாகளின ஒழுககம செயகை ஆகியவைகளை யொடடி இயறகையாகவே இபபாகுபாடு ஏறபடடுவிடுகினறது இபபாகு பாடடை ஒவவொருகாரியமும மெயபபிககததககதாக விருககினறது நறசெயகையைப புரிவதறகுரிய ஒவவொரு சிறநத வெளியிலும இமமூனறு வகுபபுகளிருபபதைபபாாககலாம ஆகவே சிறபபுறற ரமலான மாததைதக கௌரவிபபது நோனபு நோறகவேணடு மெனனும கடடளைககுடபடுவது முதலிய நறசெயகைகளைப பொருதத உறறு நோககுவோ மாயின இதிலும மூனறு வகுபபுகளிருபபது

நன்கு புலனாகும். இம்மூன்று வகுப்புகளுள் ஒன்று நோன்பை உதா சீனம் செய்கின்றது. இவ்வகுப்பு நோன்பு நோற்பதே கிடையாது. இரண்டாவது வகுப்பு நோன்பை நோற்கிறதாயினும் நோன்பின் உண்மையை உணர்ந்து அதற்குரியபலனை அனுபவிப்பதில்லை. மூன்றாவது வகுப்பு மூமினீன், சாலிஹீன் என்னும் உத்தமர்களைக் கொண்டதாகும். இவ்வகுப்பைச் சார்ந்தோர் நோன்பின் அடிப்படையையும் அதன் உண்மையையும் நன்கறிந் திருக்கின்றனர். மேலும் இவ்வகுப்பினர் பாவமான கருமங்களை விட்டு தங்களைக் காப்பாற்றிக் கொள்வதோடு, ஒழுங்கான முறைப்படி இப்புனித மாதத்தைக் கழிக்கின்றனர். இத்தகைய நல்லோர் சிறு தொகை யினர்களாக விருப்பார்களென்பதுண்மையே.

நான் இம்மூன்று வகுப்பினர்களின் நிலையை யொட்டி சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். அஃதாவது:—

வேதகட்டளையை உதாசீனம் செய்யும் முதல் வகுப்பு.

இவ்வகுப்பைச் சார்ந்தோர் தங்கள் மீதே அநியாயத்தைப் புரிகிறவர்களாகும். இவ்வகுப்பினர் அல்லாஹுதஆலாவையும் அவனுடைய கட்டளைக்குட்பட்டு புரிய வேண்டிய வணக்கத்தையும் மறந்து விட்டதன் பயனாக இவர்கள் தங்களையே மறந்துவிட்டனர்.

"அவர்கள் அல்லாஹுதஆலாவை மறந்து விட்டனர். ஆகவே அதன் பயனாக தங்களையே மறந்து விடும்படி நேர்ந்தது. மேலும் இத்தகையவர்களே இம்மை, மறுமை ஆகிய இரு வாழ்க்கையிலும் நஷ்டத்தை யனுபவிக்கிறவர்களாகும்." (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

இவ்வகுப்பினர் உண்மையான நியாய வழியை விட்டு வியர்த்தம், விரயம், எல்லை மீறுதல் முதலிய துர்வழிச் செல்லுவதை முன்னிட்டு இவர்கள் "தங்கள் மீதே அனியாயத்தைப் புரிகிறவர்கள்" என்று அழைக்கப்படுகின்றனர். வரம்பை மீறி வியர்த்தமான வழிச் செல்லுவதை அநியாயமென்றும், வேதக் கட்டளைக்குட்பட்டு நியாய வழிச் செல்லுவதை "சிராதெமுஸ்தகீம்" என்னும் நேரானவழி என்றும் அறிவிக்கப்படுகின்றது.

"அவர்கள் தங்களின்மீதே அநியாயத்தைப் புரிந்துகொள்ளுகிறவர்களாகும்" (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

எல்லை மீறிய சுகவாழ்க்கையின்மீதுள்ள ஆவலானது அவர்களைப் பைத்தியக்காரர்க ளாக்கிவிட்டது. அத்தகையவர்களின் வாழ்க்கையைச் சார்ந்த லக்ஷியம், ஆகாரத்தைச் சேர்ப்பதும், அதை உட்கொள்வதுமட்டுமாக விருக்கின்றது. மனு ஜன்மத்திற்குரிய அரும்

சக்திகளின்மூலமாய் மனிதர்கள் சிறப்பெய்த வேண்டுமென்று அல்லாஹுதஆலா மனிதர்களைப் படைத்திருக்கின்ற ஸ்திதியில், மனிதர்கள் விலங்கினம் அல்லது ஆடு, மாடு முதலியவைகளைப்போல் தங்களுக்கு வேண்டிய ஆகாரத்தைத் தேடித்திரிகின்றனர். ஆகாரத்தை அடைவதற்காக ஓடி உலாவுவது, சச்சரவுகளைப் புரிவது, ஆகியவைகளிலேயே இவ்விழியோர் நாள் முழுவதையும் வியர்த்தமாக்குகின்றனர்.

"இவர்கள் மிருகங்களைப் போலிருக்கின்றனர்" என்பது மட்டுமின்றி விலங்கினங்களைக் காட்டிலும் அதிகேவல ஸ்திதியில் இருக்கின்றனர். இவர்களே மறதியின் பள்ளத்தில் வீழ்ந்து கவிப்பவர்களாகும்." (அல்குர் ஆனின் வியாக்கியானம்).

இத்தகைய தீயோர் அல்லாஹுதஆலாவின் அரசாங்கத்திற்குக் கட்டுப்படாத கலகக் காரர்களாகும். இவ்வதிக்கிரமக்காரர்களே அல்லாஹுதஆலாவின் வரம்பை மீறும் துஷ்டர்களாகும்; இக்கொடியோர் அல்லாஹுதஆலாவின் பரிசுத்தமான சட்ட திட்டங்களை உடைத்தெறிந்து விடுகின்றனர். மனிதர்களின் உத்திரவுக்குட்பட்டு பூஜிக்கும் இவ்வறிவிலிகள் வானம், பூமி முதலியவைகளைச்சிருஷ்டித்த அல்லாஹுதஆலாவின் சமுகத்தில் பணிய வெட்கப்படுகின்றனர். அழிந்து போகக்கூடிய உலக ஆக்ஷியைச் சார்ந்த அதிகார வர்க்கத்தினரைக்கண்டு நடுங்கும் இம்மதியீனர்கள் அதிகாரிகளுக்கெல்லாம் அதிகாரியாகிய அல்லாஹுதஆலாவுக்கு அஞ்ச இஷ்டப்படுவார்களா? மனிதர்களாய்ப் பிறந்த அரசர்களின் ஒரு சிறிய உத்திரவை மீறுவதற்குக் கூட இவ்வயோக்கியர்கள் துணிவதில்லை. ஏனெனின்? இவ்வரசர்கள் இட்ட கட்டளைக் குட்படாவிடின் அதிகாரவர்க்கம் கேள்வி கேட்பதோடு கோர்ட்டுகள் சிட்சைவிதிப்பதன் மூலமாய் சந்தேகமின்றி கஷ்டத்திற்குள்ளாக வேண்டியிருக்கு மென்பதை நன்றாகவறிந்திருக்கின்றனர். மேலும் இத்தீயோர் வானம், பூமி முதலியயாவற்றிற்கும் சக்கிரவர்த்தியாகிய அல்லாஹுதஆலாவின் சட்டதிட்டங்களை அலக்ஷியமாக வெண்ணி அவைகளை மீற அதிக தைரியத்தோடு முன்வருவதைப்பார்க்கலாம். ஏனெனின்? இவர்கள் அல்லாஹுதஆலாவின் மீதும், அவன் விதிக்கப்போகும் சிக்ஷையின் மீதும் போதிய நம்பிக்கையில்லாத நாஸ்திகர்களாக விருக்கின்றனர்.

இக்கொடியோர் தங்களின் மனோ இச்சையை நிறைவேற்றிக் கொள்வதற்கான சாதனங்களை எவன் கொண்டிருக்கின்றானோ அவனை யடைய முற்படுவார்கள். மேலும் இத்தீயோர் நாய்களைப் போல் அவனுடைய பாதத்தைச் சுற்றி விழுவார்கள். கழுதையைப்

போல் அவனுக்கு சாஷ்டாங்கம் செய்வார்கள். அடிமைகளைப் போலவும், ஊழியர்களைப் போலவும் அவனுடைய சமுகத்தில் கைகட்டிநிற்பார்கள். சில தினங்களுக்கு வேண்டிய ஆகாரமும், சொற்ப தங்கம், வெள்ளி ஆகிய நாணயங்களும் வேண்டுமென்று கோரி நிற்பார்கள்.

ஆனால் இத்தீயோரை சிருஷ்டித்த அல்லாஹுத ஆலாவை, இவர்களின் தேகத்திலுள்ள ஒவ்வொரு அணுவையும், ஒவ்வொரு சொட்டு இரத்தத்தையும் பாதுகாத்து இரக்ஷிக்கின்ற அல்லாஹுத ஆலாவை, இவர்கள் தங்களின் கஷ்டகாலத்தின் போது செய்து கொள்ளுகின்ற விண்ணப்பம், பிரார்த்தனை ஆகியவைகளைச் செவியுறும் அல்லாஹுத ஆலாவை, இவர்கள் மனிதர்களின் சகாயத்தை இழந்து நிற்கதியாக நிற்கும் காலை இவர்களுக்கு ஆதரவுபுரிகின்ற அல்லாஹுத ஆலாவை, இரக்ஷகர்களை யெல்லாம் இரக்ஷிக்கின்ற பெரும் இரக்ஷகனாகிய அல்லாஹுத ஆலாவை இப்பாதகர்கள் வணங்க இஷ்டப்படுவதில்லை. மேலும் அல்லாஹுத ஆலாவின் சமுகத்தில் பணியத்தக்க சிரசை இவ்வகம்படைத்தோர் கொண்டிருக்கவில்லை.

ஒரு நல்ல வணக்கமேனும், வணக்கத்தைப்புரியத்தக்க நெற்றியேனும், பிரீதிநிறைந்த ஒரு ஜபமேனும், பாவத்தை விட்டுக்காக்கக் கூடிய ஒரு நோன்பேனும், உண்மையான மனத்தோடு செல விடுவதற்குரிய ஒருகாசேனும் இவர்களிடமில்லை.

"அல்லாஹுத ஆலாவின் தியானத்தை விட்டு இருகிக் கிடக்கின்ற ஹிருதயத்தை உடையோர்மீது நூற்றுக் கணக்கான விசனமும், நூற்றுக் கணக்கான கவலையும் உண்டு. மேலும் இவ்விழியவர்களே பெரும் வழி கேட்டின் பள்ளத்தில் ஆழ்ந்து கிடக்கின்றனர்." (அல்குர் ஆனின் வியாக்கியானம்).

ஈமான்.

உறுதி, நம்பிக்கை, ஸ்திரமான வாழ்க்கை ஆகியவைகளே மனிதர்களின் சகல காரியங்களுக்கும் வேகர்களாவிருக்கின்றன. ஷரீஅத் தானது இவ்வேரையே "ஈமான்" என்று அழைக்கின்றது. ஆகவே ஈமான் என்னும் விருக்ஷம் காய்ந்து போயிருக்கின்ற ஹிருதயத்தை யுடையோரிடம் நற்செய்கை யென்னும் கனிகளை எதிர்பார்க்க முடியாது. நம்பிக்கை, நட்பு ஆகியவைகள் அல்லது திடுக்கமும், அச்சமும் மனிதர்களுக்கு அல்லாஹுத ஆலாவின் சம்மந்தத்தை உண்டு பண்ணுகின்றன. இவ்விரு வழிகளின் மூலமாகவே மனிதர்கள் சதா அல்லாஹுத ஆலாவை யடைகின்றனர். ஆகவே நட்பு, நம்பிக்கை,

திடுக்கம், அச்சம் ஆகிய எதுவுமில்லாத அசடர் அல்லாஹுதஆலாவின் சமுகத்தில் தலைவணங்குவதற்குரிய விலங்கு மாட்டப்பட்டிருக்க மாட்டார்கள். மேலும் இத்தீயோரின் கழுத்தில் ஷைத்தான், 'நப்ஸ்' ஆகியவைகளின் அடிமைகளாக இருப்பதற்கு வேண்டிய விலங்குகள் யாவும் மாட்டப்பட்டிருக்கும்.

"நாம் அத்துஷ்டர்களின் கழுத்தில் வழிகேடு, ஷைத்தான் ஆகியவைகளின் விலங்குகளை மாட்டி விட்டோம். அவ்விலங்குகள் அவர்களின் தாவாங்கட்டை வரைமிதந்து விட்டன. மேலும் அவ்விலங்குகளிலேயே அவர்களின் தலையும் அழுந்தி விட்டது" (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

அவ்விழியோர் அல்லாஹுதஆலாவின் எத்தகைய சம்மந்தமுமின்றி ஒதுங்கி நிற்கும் இயற்கைக் குணத்தை உடையவர்களாதலின் அவர்களை ஒரு விநாடியேனும் அல்லாஹுதஆலாவை வணங்கும்படி அழைப்பது அவர்களுக்குச் சகிக்கமுடியாத பெரும் வேதனையாக இருக்கின்றது. உண்மையில் இவர்கள் அனுபவிக்க வேண்டியதாக விருக்கும் அளவற்ற கொடும் வேதனையை இவர்கள் அறியவில்லை.

"ஓ நபியே! அல்லாஹுதஆலாவின் தியானம் கஷ்டமாகத் தோன்றும் தீயோருக்கு இதைக்காட்டினும் அதி கொடூரமாய் நிகழவிருக்கும் வேதனையைச் சார்ந்த செய்தியைத் தெரிவிக்கட்டுமா? அத் தீயோருக்கு அறிவியுங்கள். அஃது நரக வேதனையாகும். அல்லாஹுதஆலாவை மறுத்துத் திரிவோர் நரகவேதனைக் குட்படவேண்டுமென்று (அல்லாஹுதஆலா) உறுதி கூறியிருக்கின்றான். அந்நரகம் கொடிய இடமாகும்." (அல்குர் ஆனின் வியாக்கியானம்)

அத்தீயோர் இயற்கையாகவே பாவமான கருமம், துற்கிருத்தியம், வழிகேடு, சமாதானமின்மை ஆகிய இருளில் சிக்குண்டு ஈமானைப் பறி கொடுத்து விட்டார்களாதலின் அல்லாஹுதஆலாவின் வணக்கத்திற்குரிய பிரகாசம் அவர்களிடை யிருக்க முடியாது. ஆனதுபற்றியே அப் பொல்லாதோர் தொழுகையை உதாசீனம் செய்வார்கள். நோன்பை நோற்கத் தக்க அருளைப் பெற்றிருக்கமாட்டார்கள். வேதத்தைச் சார்ந்த எல்லா கட்டளைகளையும் மறுப்பார்கள். "இப்லீ"ஸின் வாழ்க்கைக்கும், அத் தீயோரின் வாழ்க்கைக்கும் வித்தியாசமிருக்கமாட்டாது. மேலும் அத்தீயோர் அல்லாஹுதஆலாவை வணங்கக்கூடிய சில நிமிஷங்களையேனும் பெற்றிருக்கமாட்டார்கள்.

"இத்தீயோரின் ஹிருதயங்கள், செவிகள், கண்கள் ஆகியவைகளின்மீது அல்லாஹுதஆலா முத்திரையிட்டு விட்டான். மேலும்

இவர்கள் மறதியின் பள்ளத்தில் மறைந்து கிடக்கின்றனர்." (அல்குர்ஆனின் வியாக்கியானம்).

பாவிகளும், அதிக்கிரமக்காரர்களுமான பணக்காரர்களும், தலைவர்களும்.

சிறப்புள்ள ரமலான் மாதத்தில் நோன்பு நோற்காத வகுப்பினருக்கு இவ்வரிய மாதத்தின் நற்பாக்கியங்களில் உரிமை கிடையாது. அத்தீயோர் ஈடுபட்டிருக்கும் உல்லாச வாழ்க்கையினிடை, நோன்பு நோற்பது பெரும் சங்கடமாக விருக்கின்றது. அவ்விழியோருள் தலைவர், பணக்காரர் என்னும் ஒரு சாரார் எல்லைபற்ற துற்செய்கையின் இருளில் சிக்குண்டு கிடக்கின்றனர். மேலும் 'தக்வா' என்னும் பிரகாசத்தின் ஓர் சிறு சுடரேனும் அவர்களின் துற்கிருத்தியத்திற்குரிய இல்லத்தில் படுவதில்லை. வீண் விளையாட்டு, சுகஜீவனம், உல்லாச வாழ்க்கை ஆகியவைகள் அத்தீயோரைத் தன்பக்கம் இழுத்துக் கொண்டன. பொறுமையும், பாவத்தை விட்டு தப்புவதுமே நோன்பின் அடிப்படையாகும். மனோ இச்சையை அடக்குவதற்கான சக்தியைப் பெறுவது உயரிய இலக்ஷியங்களைப் பெறுவற்கான கஷ்ட நிஷ்டூரங்களை அனுபவிப்பது, தன்னடக்கம் ஆகியவைகளே அவ்வடிப்படையின் நோக்கங்களாகும். ஆகவே நோன்பை நோற்கவேண்டுமாயின் தன்னடக்கம், பொறுமை, தியாகம், ஆத்மசுத்தி ஆகியவைகள் வேண்டற்பாலன. ஆனால் கெட்ட 'நப்ஸின்' கட்டளைகட்குட்பட்டு உல்லாச வாழ்க்கையைக் கொண்டிருக்கும் அத்தீயோர் தன்னடக்கம் பொறுமை, உறுதி ஆகியவைகளைக் கொண்டிருக்க முடியுமா? பேராசைக்கும், மனோ இச்சைக்கும் அடிமையாகிக் கிடக்கின்ற அத்தீயோர் ஒருமணி நேரமாவது தங்களின் நப்ஸை அடக்கிவைக்க முடியுமா?

அல்லாஹுதஆலாவின் பேரருள் வருஷித்த காலத்தின் ஞாபகார்த்தத்திற்குரிய ரமலான் மாதம், மூமின்களுக்கு க்ஷேமத்தையும், அல்லாஹுதஆலாவைப் பணிவோருக்கு சித்தியையும் அளிப்பதற்கான ஊற்றுக் கண்களையுடைய அரிய ரமலான் மாதம், கஷ்டங்களைப் பொறுத்துக்கொள்வதற்கான தன்னடக்கம், அல்லாஹுதஆலாவின் பிரீதியை யடைவதற்கான தியாகங்களைப்புரியும்படி கட்டளையிடுகின்ற சிறப்புற்ற மாதம் உதயமாகி சென்றுவிடுகின்றது. ஆனால் இக்கீர்த்தி வாய்ந்த காலத்தில் ஷைத்தான்களைப் பின்பற்றியிருக்கின்ற அப்பொல்லாதவர்களின் துற்செய்கையில் எத்தகைய மாறுதலும் ஏற்படுவதில்லை. மேலும் அத்தீயோரில் பலர் சிறப்புற்ற ரமலான்

மாதத்தினிடையே விலங்கினங்களைப் போல் அல்லாஹுத ஆலாவின் கட்டளைக்கு மீறிய பற்பல துற்கிருத்தியங்களைப் புரிவதில் ஆழ்ந்து கிடக்கின்றனர். கீர்த்தி வாய்ந்த ரமலான் மாதத்தில் நற்பாக்கியங்கள் சொரிவதற்குப் பதிலாக அத்தீயோரின் தலைகளில் அல்லாஹுத ஆலாவின் முனிவும், கோபமும் இறங்கிய வண்ணமாக விருக்கின்றன.

":ரமலான் மாதம் பிறந்து விடுமாயின் தீமையான நரகத்தின் வாயல்கள் அடைக்கப்பட்டு, நன்மைக்குரிய மோக்ஷத்தின் வாயல்கள் திறக்கப்படுகின்றன. மேலும் ஷைத்தான்களின் செய்கைகள் தடுக்கப்பட்டுவிடுகின்றன." என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அருளியிருக்கின்றார்கள். (புகாரீ).

ஆனால் தீயவருக்கு அவர்களுக்குரிய நரகத்தின் வாயல்கள் அதிவிசாலமாய்த் திறக்கப்படுவதோடு அவர்களின்மீது ஷைத்தான்களின் ஆதிக்கம் மும்முரமாகிவிடுகின்றது.

ஷைத்தான்களின் கூட்டமும் இப்லீஸ்களின் வகுப்பும்.

ஷைத்தான்களின் சந்ததிகள், ஷைத்தான்களைச் சூழ்ந்து கொண்டிருப்பதைப்போல் அதிக்கிரமக்காரர்களான பணக்காரர்களையும், தலைவர்களையும் பலர் சூழ்ந்து கொண்டிருக்கின்றனர். முஷ்ரிக்குகள், விக்கிரகங்களைப் பூஜிப்பதைப்போல் அவ்வதிக்கிர மக்காரர்களை ஜனங்கள் பூஜிக்கின்றனர். ஆகவே அத்தலைவர்களும், பணக்காரர்களும், அவர்களைச் சேர்ந்தவர்களும் ரமலான் மாதத்தின் சட்டதிட்டங்களை மீறிப்புரியும் தீச்செயல்களைக்கண்ணுறும் ஜனங்களின் நாக்களில் ஷைத்தான்கள் முத்திரை யிட்டிருக்கின்றன. மேலும் அதிக இழியவர்களான பணக்காரர்களின் அடிமை வாழ்க்கைக் குட்பட்டு இவர்களின் ஹிருதயத்தில் அல்லாஹுதஆலாவின் அச்சம் எடுபட்டுப் போயிற்று. ஆகவே சத்தியம், நன்மை, நியாயம் ஆகியவைகளையொட்டி வார்த்தையாட இவர்கள் சக்தியற்றிருப்பதோடு 'ஈமான்' மரணித்து ஊமைஷைத்தான்களாகி இவர்கள் அல்லாஹுத ஆலாவை விட்டு மனிதர்களை வணங்குவோ ரென்னும் கெட்டபெயருக்கு ஆளாகிவிட்டனர்.

கெட்ட ஆலிம்களின்சேஷ்டை

துஷ்டர்களான தலைவர்களையும், பணக்காரர்களையும் சூழ்ந்து கொண்டுபூஜிக்கின்றவர்களின் ஜாப்தாவில் உலமாக்கள், மஷாயிகுகள், சூபியாக்கள், கத்தீபுகள், முதலியோரின் நாமங்கள் ஏராளமாயிருப்பதைப் பார்க்கும்போது பெரும் விசனத்தை மூட்டுகின்றது.

மகான்களென்று அழைத்துக் கொள்ளும் இப்பெரியோர்கள் தங்களை நபித்துவத்தின் சந்ததிகளென்றும், ரஸூல்களின் கீர்த்தியில் தங்களுக்கு உரிமை யுண்டென்றும் கருதுகின்றனர். மேலும் இப்பெரியார் ஹஜருல்அஸ்வதைப்போல் தங்களின் கரங்களை ஜனங்கள் முத்தமிடும்படிச் செய்கின்றனர். மஸீஹின் காலத்திய புரைஸிகளைப் போலவும், சித்தூகீன்களைப் போலவும் நீளஅங்கிகளைத் தரித்துக்கொண்டு தங்களின் பெருமையைப் பகிரங்கப் படுத்துகின்றனர்.

பெரியாரென்று அழைத்துக்கொள்ளும் இவர்கள் தங்களின் பெருமை, கீர்த்தி ஆகியவைகளை முன்னிட்டு அகமகிழ்கின்றனர். இவர்கள் தங்களின் முரீதுகளினிடையேயும், விஸ்வாஸிகளினிடையேயும் வீற்றிருக்கும் போது நடிப்பது பெரும் விநோதமாகவிருக்கும். இவர்கள் தங்களைத் தேவர்களைப் போலவும், ரஸூல்களைப் போலவும் காட்டிக்கொள்ள பின்வாங்குவதில்லை. ஆனால் இப்பெரியார்கள் உலகில் ஜீவித்திருப்பது அல்லாஹுதஆலாவின் மார்க்கத் திற்கு அளவற்ற இழிவைத் தருகின்றது. இவர்களை ஷைத்தான்களின் கலீபாக்களென்றும், இப்லீஸ்களின் பிரதிநிதிகளென்றும் கூறுவது பொருந்தும். இவர்கள் சமூகத்தின் எல்லா இழியவர்களைக் காட்டினும் கொடியோராகும். இத்தீயோர் உலமாக்களாயின் இவர்களை கெட்ட உலமாக்களென்று கூறுவது குற்றமா? இத்தீயோர் மஷாயிகுகளாக விருப்பின் இவர்களை கெட்டமஷாயிகுகளென்று கூறினாலென்ன? இத்தீயோர் சூபிகளாகவிருந்தால் இவர்களை கெட்டசூபிகளென்று கூறுவது குற்றமா? இத்தீயோர் கதீபுகளாக யிருந்தால் இவர்களை கெட்ட கதீபுகள் என்று கூறுவது குற்றமா? இத்தீயோரின் 'பித்னு' வைக்காட்டினும் சமூகத்திற்கு வேறுபெரும் 'பித்னு' கிடையாது. நப்ஸின் இச்சையே இத்தீயோரின் ஷரீஅத்தாகும். வெள்ளி நாணயமும் தங்க நாணயமுமே இத்தீயோரின் கிப்லாவாகும். ஷைத்தானும், நப்ஸுமே இவர்களின் வணக்கத் திற்குரிய விக்கிரகங் களாகும். பெருமை, கீர்த்தி ஆகியவைகளைப் பெறுவதே இவர்களின் கவலையும், தியானமுமாகும். பணக்காரர்கள், அதிகாரிகள், தலைவர்கள் முதலியோரின் தர்பாரிலிருந்து பெரியாரென்னும் இத் தீயோருக்கு பட்டம், உபகாரச் சம்பளம், நன்கொடை ஆகியவைகள் சதாகிடைத்த வண்ணமாக விருக்கும். ஆகவே மகான்களென நடிக்கும் இத்தீயோர் பணக்காரர்களின் பிசகைக் கண்டிக்க முடியாமல் ஊமைகளைப் போலிருக் கின்றனர். இப்பெரியார் தங்களுக்குக் கிடைத்துவரும் சம்பளம், பட்டம் ஆகிய

வைகள் பறி பட்டு விடுமோ என்னும் அச்சம் கொண்டவர்களாக விருக்கின்றனர். ஆனதுபற்றியே நல்லதை ஏவி கெடுதியை யகற்று வது சம்மந்தமான காரியத்தைச்செய்ய பெரியாரென நடிக்கும் இவர் கள் சக்தியற்றிருக்கின்றனர். மேலும் இப்பெரியார்கள் ரமலான்மாதத் தின் கௌரவத்தைக்குலைக்கப்படும் வேடிக்கையைப்பார்த்து அதைக் கண்டிக்காமல் மௌனவிரதங் கொண்டு விடுகின்றனர். இச்சிறப்புற்ற மாதத்தில் அல்லாஹுதஆலாவின் கட்டளைகள் உதாசீனம் செய்யப் படுவதைக் கண்டு சந்தோஷ முறும் இத் தீயோர் ஊமை ஷைத்தான் களாதலின் இவர்கள் அக்கெடுதியை யகற்றக் கூடுவதில்லை. மார்க் கத்தை பஹிரங்கமாய் உதாசீனம் செய்யப் படுவதைக் கண்டு இப்லீ ஸின் கலீபாக்களுக்கு ரோஷம் உண்டாவ தெங்ஙனம்? இத்தீயோர் நற்காரியங்களை ஏவுவதென்னும் கடமையை மறந்து விட்டனர். மேலும் கெடுதியை யகற்றுவதன் மூலமாய் தங்களின் லக்ஷியத்திற்குக் குந்தகமேற்படுவதை முன்னிட்டு அவ்வரும் காரியத் தை அழித்து விட்டனர். "தங்களுடைய கல்வியன் மூலமாய் அல்லா ஹுத ஆலாவுக்குப் பயனளிக்காத ஆலிம்களுக்கே கியாமநாளில் எல் லா மனிதர்களைக் காட்டிலும் அதி கொடுமையான வேதனை யுண்டு" என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அருளியிருக் கின்றார்கள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் உண்மை யான உத்திரவுகளை மாற்ற முடியாதென்று அறிவிக்கப்படுவது உண் மையாயின் கியாமநாளில் இத்தகைய கெட்ட உலமாக்களுக்கே கடுந் தண்டனை விதிக்கப்படுமென்று நான் நிச்சயமாய்க்கூறுவேன்.

நாஸ்திகக் கோள்கையின் சேஷ்டை.

ரமலான் மாதத்திய நோன்பை நோற்காமல் அதை உதாசீனம் செய்துவரும் கூட்டத்தில் இன்னொரு விபரீதக் கோஷ்டி தோன்றி யிருக்கின்றது. இக்கோஷ்டியின் அடாத செய்கைகள் தொத்து வியா தியைப் போன்ற கேட்டை விளைவித்து வருகின்றது. மேலும், இக் கோஷ்டியார், மார்க்கக் கட்டளையைப் பரிகசிப்பது, அல்லாஹுத ஆலாவின் வரம்பை மீறி மனோ இச்சையை யனுபவிக்க முற்படுவது ஆகியவைகளில் அதிக செல்வாக்குள்ளவர்களாக விருக்கின்றனர். நாஸ்திகக் கொள்கையானது முட்டாள்தனத்தை யொட்டியதேயன்றி வேறல்ல. மேலும் இந்நாஸ்திகக் கொள்கையானது அநேகமாய்க் கல்வியின் போர்வையைப் போர்த்துக்கொண்டு அடக்கமற்று வெளிக் கிளம்புவதைப் பார்க்கலாம். இது பெரும் விசனத்தை மூட்டத்தக்க

தல்லவா? இக்கோஷ்டியினர் இன்றைய முன்னேற்றம், நாகரீகம் ஆகிய வைகளின் விபரீத லாகிரியினால் சிருஷ்டிக்கப் பட்டிருக்கின்றனர். அறியாமை, அகம் ஆகியவைகளை அடிப்படையாய்க் கொண்ட இன்றைய நவீன பள்ளிக்கூடங்கள் இக்கோஷ்டியினரையீன்றிருக்கின்றன. உண்மையில் இக்கோஷ்டியாரிடம் சமாதான மின்மை, குழப்பம், முட்டாள் தனம், பெருமை ஆகியவைகளைத் தவிர்த்து வேறு எதுவும் கிடையாது. மேற்கூறப்பட்டவர்கள் பலமான மறதிக் கிரையாகி பெரும்பாவத்தில் சிக்குண்டு கிடக்கிறார்கள். வேதகட்டளையை ஒப்புக் கொள்ளாமல் மறுப்பதும், மார்க்க சம்பந்தமான சட்டதிட்டங்களை உதாசீனம் செய்து பரிகசிப்பதும், அல்லாஹுதஆலாவின் வரம்பை மீறுவதும் அவர்களிடை வியாபகமடைந்திருக்கின்றன. "நோன்பு நோற்பதானது அரேபியாவின் பூர்வ அறியாமையைச் சார்ந்த ஏழ்மை, பசிப்பிணி, முதலியவைகளை ஞாபகம் மூட்டத்தக்க மிருகத் தனமான காரிய" மென்று இக்கோஷ்டியைச் சார்ந்த பலர் கூற முன் வந்தனர். நோன்பானது அரேபியாவில் உணவு கிட்டாததை முன்னிட்டோ? அன்றி அறியாமையை முன்னிட்டோ? ஏற்படுத்திக் கொண்ட விபரீதச் செய்கை யென்று அறிவிக்கவும் இக்கோஷ்டியார் வெட்கப்படுவதில்லை. உணவைவிட்டு தேகக் கஷ்டத்தை ஏற்றுக் கொள்வதன் மூலமாய் முக்தி பெறலாமென்னும் தப்புக் கொள்கையின் காரணமாக அரேபியர் நோன்பு நோற்றுவந்தனரென்று கூறவும் இக் கோஷ்டி பயப்படுவதில்லை. இந் நாஸ்திகக் கொள்கையின் கெடுதியை விட்டு பரிசுத்தமான அல்லாஹுதஆலா நம்மைக் காப்பாற்றுவானாக.

இக் கோஷ்டியைச் சார்ந்த பலர் தங்களின் நாஸ்திகக் கொள்கையை மார்க்கத்தோடு இணைத்துவிட முயலுகின்றனர். இவ் வறிவிலிகள் பகுத்தறிவுக் கேற்றவாறு மார்க்கத்தைத் திருத்தியமைக்கமுயலுவது விந்தையே. மேலும் நோன்பு நோற்பது 'பர்லு' என்னும் கடமையாக விருப்பினும் ஒருபரதேசிக்கு (பித்யா) அன்னமளித்து நோம்பு நோற்பதால் ஏற்படும் கஷ்டத்தை விட்டுத் தப்பித் துக்கொள்ளலா மென்று இவ் விபரீத வகுப்பினர் கூறுவதைப்பார்க்கலாம். இத்தகைய தீயவர்களே உலகின் சமாதானததைக் கெடுத்து ஜனங்களை வழிகேட்டின் பள்ளத்தில் தள்ளுகிறவர்களாகும்.

"பூமியில் கலகத்தை உண்டு பண்ணாதீர்களென்று அவர்களிடம் அறிவிக்கப்பட்டால் அவர்கள் "நாங்கள் சமூகத்தைச் சீர் திருத்துகிறவர்களாகும்" என்று கூறுவது ஆச்சரியமல்லவா? இவர்களே உலகில் குழப்பத்தை உண்டு பண்ணுகிறவர்களென்று நிச்

சயித்துக் கொள்ளுங்கள். ஆனால் இவர்கள் தங்களுடைய குழப்பத்தின் நிலையை உணரவில்லை. (அல்குர் ஆனின் வியாக்கியானம்).

உலகில் பெரும் விபரீதத்தை விளைவித்துக் கொண்டிருக்கும் இத்தீயோரின் நிலையைப்பற்றி நான் என் சொல்வேன்? என் கண் முன் நூற்றுக்கணக்கான துக்க சம்பவங்கள் நிகழுகின்றன. அஞ்ஞான குறும்புத்தனம், நாஸ்திகக் கொள்கை, அறியாமையின் அதிக்கிரமம் ஆகியவைகளைச் சார்ந்த எண்ணிறந்த சேஷ்டைகளின் மூலமாய் 'ரமலான்' என்னும் இப்புனித மாதத்தில் இத்தீயோர் தங்களின் நரகம்போன்ற வயிற்றை நிறப்புவதற்காகத் தீயை உட்கொள்வதைப் பார்க்கும்போது மனம் துடிக்காமலிருக்க முடியுமா? இத்துக்க சம்பவத்தை எவ்வாறு விரித்துக் கூறமுடியும்? இத்தீயோர் சிறப்புற்ற இம்மாதத்தில் அலக்ஷிய வெண்ணத்தோடு உண்பதைப் பார்ப்போமாயின் இத் தீயோருக்கும் ரமலான் மாதத்திற்கும் மத்தியில் எத்தகைய சம்மந்தமுமில்லையென்றே கூறவேண்டியிருக்கும்.

குற்றமா, குழப்பமா?

ஒன்று மறதியினாலும் தவறுதல் காரணமாயும் நிகழுவதாகும். மற்றொன்று வேணுமென்றே சட்டத்தை மீறுவதாகும். சந்தேகமின்றி பழைய மனிதர்களுள் பலர் ஷைத்தான்களின் செல்வாக்கிற்குட்பட்டு மார்க்கத்தை இழந்துவிடுகின்றனர். மேலும் குறிப்பாக பணக்காரர்களிலும் தலைவர்களிலும் பலர் மார்க்கக் கட்டளையை லக்ஷியஞ் செய்யாது மறதிக்கிரையாகி விடுகின்றனர். ஆனால் அவர்களுள் எவரும் வேத கட்டளையைப் பரிகசிக்கக் கூடியவராக பார்க்க முடியாது.

இன்றைய நாகரீகம் முதிர்ந்த வகுப்பைச் சார்ந்தோர் இஸ்லாமிய சட்ட திட்டங்களைப் பரிகசித்து அதை உதாசீனம் செய்கின்றனர். மேலும் நோன்பு நோற்கவேண்டுமென்னும் கட்டளையை முன்னிட்டு இவர்கள் ஆச்சரியமெய்துவதோடு இம்முட்டாள்தனமான செய்கைக்குட்பட்டு ஏன் பசிப்பிணிக் காளாகுகின்றனர்? என்றும் வினவுகின்றனர்.

"ஓ! முஸ்லிம்களே!! உங்கள் மார்க்கத்தைப் பரிகசித்து ஏளனம் செய்வதோடு மார்க்கக் கட்டளையை ஒருவித விளையாட்டிற்குள்ளாக்கி கொண்டவர்களோடு நீங்கள் சம்மந்தம் வைத்துக் கொள்ளாதீர்கள்." (அல்குர் ஆனின் வியாக்கியானம்).

"நீங்கள் தொழுகைக்காக சப்தமிடும்போது இக்கொடியவர்கள் பரிகசித்து ஏளனம் செய்கின்றனர். ஏனெனின்? இவர்கள் தங்க

ளின் அறிவை இழந்திருக்கின்றனர்.'' (அல்குர்ஆனின் வியாக்கியானம்.)

'பகரா' வென்னும் சூராவில் இத் தீயோரைப்பற்றி அறிவிக்கப் பட்டிருப்பதாவது:—

"காபிர்களின் பார்வையில் உலக வாழ்க்கை மட்டுமே நிறம்பிக் கிடக்கின்றது. ஆகவே அக்காபிர்கள் அல்லாஹுத ஆலாவின் மீது ஈமான் கொண்டிருப்போரை பரிகசம் செய்கின்றனர். (அல்குர் ஆனின் வியாக்கியானம்).

மேற்கூறப்பட்ட வியாக்கியானங்கள் இஸ்லாமையும், முஸ்லிம் அல்லாதவர்களையும் சார்ந்தனவாகும். ஆனால் நாகரீகம், முன்னேற்றம் ஆகியவைகளில் முதிர்ந்த முஸ்லிம் வகுப்பினரின் நிலை மிகக் கேவலமானதாக விருக்கின்றது.

மேலும் நாகரீகத்தில் முதிர்ந்த இக்கோஷ்டியானது வழிகேட்டின் பள்ளத்தில் வீழ்ந்து தவிக்கின்றது. தொழுகை சம்மந்தமான கட்டளையைக் காட்டினும் இக்கோஷ்டிக்கு அருவருப்பையும், கோபத்தையும் மூட்டத் தக்க வேறு காரியம் கிடையாது. ஏனெனின்? தொழுகையை முன்னிட்ட நடவடிக்கைகள் அநாகரீகமா யிருப்பாதோடு அத் தொழுகை நாகரீக வாழக்கைக்கு ஏற்றதாக இல்லையாம். மேலும் 'ஒலூ' செய்வதன் மூலமாய் சட்டையின் (ஷர்ட்டின்) கையிலுள்ள 'கப்' கெட்டுப் போகிறதாம். 'ஸிஜ்தா' செய்வதன் மூலமாய் முழங்கால் பக்கத்தில் கால் சட்டையில் (பெந்துலமில்) சுருக்கம் ஏற்படுகிறதாம்.

தொழுகையைப் பற்றி இத்தகைய எண்ணத்தைக் கொண்டிருப்போர் நோன்பைப் பொருத்துக் காட்டும் அருவருப்பை விவரித்துக் கூறவேண்டிய அவசியமில்லையென்றே கருதுகிறோம். நோன்பு நோற்பது சம்மந்தமாய் இக்கோஷ்டி கூறுவதென்னவெனின்? "இன்றய நாகரீக வாழ்க்கை நாளொன்றுக்கு ஐந்து தடவை உணவை உட்கொள்ளும்படி கட்டளையிடும் ஸ்திதியில் ஒரு மாதம் வரை மனிதர்கள் உணவை உட்கொள்ளாமல் பசிப்பிணிக்கு இரையாக வேண்டுமென்னும் அவசியமே கிடையாது'' என்பதே.

சீர்திருத்தக்காரர்களென்று அழைத்துக்கொள்ளும் தஜ்ஜால்கள்.

இந்நாகரீகக் கோஷ்டியுள் ஒரு சாரார் தங்களை சமூகத்தின் தலைவர்களென்றும், சமூகச் சீர்திருத்தக் காரர்களென்றும் சமூகத்தின் உண்மையான வழிகாட்டிகளென்றும் அழைத்துக் கொள்ளுகின்றனர். முஸ்லிம் பொதுமக்கள் இஸ்லாமை மறந்துகிடக்கின்றன

ராயினும், இவர்கள் இஸ்லாமை அருவருத்து விடவில்லை யென் பதை இத்தலைவர்கள் நன்கறிவர். ஆதலின் பெரியார்களென நடிக்கும் இவ்விழிபவர் கான்பரன்ஸ்களின் ஸ்டேஜ்களில் பிரசங்கிக்க நின்று விடுவர்களாயின் இவர்கள் ஈமான், இஸ்லாம், ஷரீஅத் ஆகியவை களின் உருவத்தைப்போல் தோற்றப்படுகின்றனர். இவர்கள் எம் மார்க்கத்தின் முதல் அங்கங்களான வணக்கங்களைப் புரிய இஷ்டமில் லாது மறுத்துத் திரிகின்றனரோ? அவ்வணக்கத்தை ஜனங்கள் நிறை வேற்றுவதற்காக இவர்கள் நபிகளைப்போல் அழவும், ரஸூல்களைப் போல் கண்ணீர் சொரியவும் பார்க்கலாம்.

மேலும் தொழுவது, நோன்பு நோற்பது ஆகியவைகளையொட்டி இவர்களைக்காட்டினும் வேறு எவரும் அரிய பிரசங்கங்களைப் புரிய முடியாது என்றும், இஸ்லாமிய வணக்கங்களிலுள்ள அரும் நன்மை களைப் பிரசாரம் செய்வதில் இவர்களைக் காட்டினும் நல்ல பிரசங்கி கள் எவரும் இருக்கமுடியாது என்றும் சிலர்கூறுவர். ஆனால் உண்மை யில் இவர்கள் மார்க்க சட்டதிட்டங்களை யிழித்துக் கூறுகிறவர்களாக விருப்பதோடு இவர்களின் வாழ்க்கை மார்க்கத்திற்கு பெருந்தீங்கான நாஸ்திகக் கொள்கை, அஞ்ஞானம் ஆகியவைகளை அபிவிருத்தி செய்யக்கூடியதாகவிருக்கிறது.

''இவர்கள் தங்களின் நயவஞ்சகத்தின் மூலமாய் அல்லாஹுத ஆலாவையும், முஸ்லிம்களையும் ஏமாற்றக் கருதுகின்றனர். ஆனால் உண்மையில் இவர்கள் தங்களின் நப்ஸையே ஏமாற்றிக் கொண்டிருப் பதை உணரவில்லை'' (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

ஒரு சந்தோஷச் செய்தி.

சிலவருடங்களாக மேல் நாட்டு கல்விகற்கும் மாணவரில் ஓர் அழ கிய மாறுதல் தோன்றி யிருக்கின்றது. அவர்களுள் பலர் தங்களின் கெட்ட கொள்கையை விட்டு மீண்டும் அல்லாஹுத ஆலாவின் சமுகத்தையடைய விரும்புவதை நானறிவேன். இஸ்லாமிய உலகத்திற் கும், முஸ்லிம்களுக்கும் சமீப காலத்தில் நிகழ்ந்த கஷ்டநிஷ்டூரங்க ளின் மூலமாய் இம்மாணவர்கள் கண்ணைத் திறந்து பார்க்க ஆரம்பித்த னர். ஆகவே இத்தகைய மாணவர்கள் நம் கண்டனத்திற்குட்பட மாட்டார்கள். இம்மாணவர்களுள் ஏற்பட்டிருக்கும் மாறுதல் ஸ்திர மானதாக யிருக்குமாயின் இவர்களின் கரங்களைநாம் முத்தமிடுவோம் என்பதில் சந்தேகமில்லை. உயர்தரமான நிகிள அங்கியின் முன்று னைக்கு பதிலாய் இம்மாணவர்கள் அணிந்திருக்கும் பரங்கி கோட்டு களின் முன்றனையை கண்ணில் ஒத்திக் கொள்ளுவோம். ஏனெனின்?

இச் சோதனைக்குரிய காலத்தில் இம்மாணவர்களைக் காட்டினும் இஸ்லாமுக்கும், முஸ்லிம் சமூகத்திற்கும் நன்மை பயக்கத்தக்க ஊழியத்தை எவரும் புரியமுடியாது. ஆதலின் இவர்கள் சீர்திருந்துவதைக் காட்டினும்முஸ்லிம் உலகத்திற்குவேறு நற்செய்தி கிடையாதென்றே கூறுவேன்.

“அல்லாஹுத ஆலா இதற்கு பிறகு ஓர்பெரும் விஷயத்தை வெளியிடக் கூடும்.” (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

நோம்புநோற்போர் உற்றுநோக்க வேண்டும்.

(இமாமுல் ஹிந்துமௌலானு அபுல்கலாம் ஆஜாத்அவர்கள் எழுதியது

நோம்பு நோற்காமல் அல்லாஹுத ஆலாவின் கட்டளையைஉதாசீனம் செய்து திரியும் அகம் படைத்தோரைப்பற்றிய செய்தியை ஓரளவு தெரிந்துகொண்ட நீங்கள் அல்லாஹுதஆலாவின் கட்டளைக்குட்பட்டு நோம்பு நோற்கிறவர்களின் உண்மை நிலையைப் பற்றி சற்று உற்று நோக்குவீர்களாக. நோம்பை நோற்காதிருப்போர் மார்க்கத்தை துறந்தவர்களென்று கூறுவோம். ஆனல் மார்க்கக் கட்டளையை ஏற்று நோம்பு நோற்பதாய்ச் சொல்லிக் கொள்ளுவோரின் நிலையும் போற்ற தக்கதாயில்லை. நோம்பு நோற்காதமுதல் வகுப்பினரை ஜலத்தை விட்டு வெகுதூரம் சென்று விட்டவர்க ளென்றும், நோம்புநோற்கும் இரண்டாவது வகுப்பினரை ஆற்றங்கரையில் ஜலத்திற்கு சமீபமாய் வசிப்பவர்களென்றும் கருதப்படுகின்றது. ஆகவே இரண்டாவது வகுப்பின் ஸ்திதியை ஆராய வேண்டியிருக்கின்றது.

* * *

இவ்விரண்டாவது வகுப்பு ஜலத்தை அருந்தி சுகமெய்துகின்றதா? முதல்வகுப்பைப் போலவே தாகவிடாய் கொண்டிருக்கவில்லையா?

* * *

அந்தோ! உண்மையைக் கண்டறியும் கண்கள் இரத்தத்தால் மறைந்து கிடக்கின்றன. சித்தியடையக் கருதி வெளிச்சென்றகால்கள் இது வரைச்சென்றும் ஜெயமெய்தக்காணேம். முதல் வகுப்பினர் ஆற்றையடை வதற்கான வழியை விட்டன ரென்ப துண்மையே. ஆனல் இரண்டாவதுவகுப்பினர் ஆற்றங்கரையில் கூடாரமிட்டு அதில் வசிக்கின்றனர். ஆதலின் இவ்வகுப்பினர் தக்க கூலியை பெறவேண்டுமென்பதிலும் சந்தேகமில்லை. ஆற்றங்கரையில் வசிப்பது ஆற்றங் கரை

யின் மகிமையை உத்தேசித்தல்ல. ஆற்றங்கரையில் வசிப்பது ஜலமரு ந்து வதற்காக வென்பதை எவரும் மறுக்கமுடியாது. முதல் வகுப்பு ஜலத்தை விட்டு வெகுதூரத்திலிருப்பதால் அது தாகவிடாய் கொண்டி ருப்பது சகஜமே. ஆனால் இரண்டாவது வகுப்பு ஜலத்தை யடைந்தும அந்தோ! தாகவிடாய் கொண்டிருக்கிறது.

* * *

ஒருவகுப்பிற்கு பட்கு கிடைக்கவில்லை யென்றால் மற்றொருவகுப் புக்குக்கரை தென்படவில்லையென்று கூறவேண்டியிருக்கிறது. விச னமே!

* * *

இவ்விரண்டாவது வகுப்பினர் மார்க்கத்தின் உத்திரவுகளை ஏற் றுக் கொண்டனர். ஆனால் அவ்வுத்திரவுகளின் உண்மையை உணர வில்லை. ஆகவே இவ்விரண்டாவது வகுப்பு தோலியைமட்டும் எடுத்துக்கொண்டு அதன் பருப்பை இழந்து விட்டனர் என்றும் முதல்வகுப்பு தோலி, பருப்பு ஆகிய இரண்டையும் எடுத்தெறிந்து விட்டனர் என்றும் கூறலாம். மேலும் இரண்டாவது வகுப்பினர் தேகத்தைமட்டும் மனிதனென்று கருதுகின்றனர். ஆனால் ஜீவனில் லாது போயின் தேகம் அழிகி விடக்கூடிய பிணமென்பதை இவ் வகுப்பினர் உணரவில்லை. இவ்விரண்டாவது வகுப்பினர் திரையை வடிவமுள்ள பிரீதியான முகமெனக் கருதுகின்றனர். ஆனால் திரையை முகமெனக் கருதுவதை விட்டு திரைக் குள்ளிருக்கும் முகத்தை நேசிப்பவர்களே இன்ப முறக் கூடும்.

கனிகளை யடையக் கருதி விவசாயி தன்னிடமுள்ள வித்தை விதைக்கின்றான். புஷ்பத்திலுள்ள நல்ல வாசனையின் மூலமாய் மூளைக் கேற்படும் உல்லாசத்தை முன்னிட்டே அப்புஷ்பம் சிறப் பெய்துகின்றது. எனவே வித்தானது கனியைத் தரவில்லையாயின், புஷ்பம் நல்ல வாசனையை யளிக்கத்தக்கதாக வில்லாது போயின் விவ சாயி விதைப்பதற்கு சிரம மெடுத்துக் கொள்ளாது சுகமே நித்திரை செய்து கொண்டிருக்கலா மல்லவா? நல்ல வாசனை யற்ற புஷ்பத்தைக் காட்டினும் அடுப்பி விட்டெறிக்கத்தக்க உலர்ந்த விறகு மதிக்கத் தக்கதல்லவா?

* * *

தொழுகையாகட்டும், அல்லது நோம்பு நோற்பதாகட்டும் மார்க்க சம்மந்தமான வணக்கம், கட்டளை ஆகியயாவும் லக்ஷியங்களா கவோ அல்லது லக்ஷியத்தையடையும் கருவிகளாகவோ இருக்கின்றன. அல்லாஹுத ஆலாவுக்கு வணங்குவது, அவனை அடி பணிவது,

அவனை உள்ளச் சத்தோடு தியானிப்பது, அவனை நோக்கி இறைஞ்சுவது அல்லாஹ் அல்லாதவைகளின் சம்மந்தத்தை யறுப்பது முதலியவைகள் தொழுகையின் முக்கிய அங்கங்களாகும். விலக்கப்பட்ட அருவருப்பான இழிய பாவ கருமங்களை விட்டுத்தப்புவதே இவ்வங்கங்களின் லக்ஷியமாகும்.

இஸ்லாமை யேற்றுக்கொள்ளும்படி ஜனங்களை அழைத்ததைச் சார்ந்த ஆரம்பகாரியத்தை யுணருவது, இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் முன் மாதிரியான நடவடிக்கையைப் புதுப்பிப்பது, அல்லாஹ் அல்லாதவைகளை விட்டு ஒரே நாயனை வணங்கும் எல்லா வகுப்பினர்களும் ஓரிடத்தில் சேகரமாகுவது, இஸ்லாமிய சகோதரத்துவத்தை யுண்டு பண்ணுவது, தேசம், சமூகம் ஆகியவைகளை ஒருருவமாக்குவது ஆகியவைகள் 'ஹஜ்ஜு' என்னும் கட்டளையை யொட்டிய லக்ஷியங்களாகும். அல்லாஹுதஆலாவின் சம்மந்தம் மார்க்கத்தைச் சார்ந்த உத்திரவுகளை நிலை நிறுத்துவது, வேற்றுமை, மனக்கசப்பு ஆகியவைகள் ஒழிவது முதலிய பலனை மேற்கூறிய லக்ஷியங்கள் அளிக்கத் தக்கனவாக விருக்கின்றன.

உண்மை இவ்வாறிருக்கும் ஸ்திதியில் பசி, தாகம் ஆகியவைகளை மட்டும் நோம்பென்று கூறமுடியுமா? பசி, தாகம் ஆகியவைகளை மட்டும் நோம்பென்று கூற முடியுமாயின் பசிப்பிணியில் சிக்குண்டிருக்கும் ஒவ்வொரு பரதேசியையும் பெரும் வணக்கஸ்த ரென்றும், உணவுக்கு வழியற்ற ஒவ்வொரு எளியவரையும் சிறப்புற்ற 'மூமின்' என்றும் கருதவேண்டுமல்லவா? அல்லாஹுதஆலாவை வணங்கும் ஒரு அரசர் அறுசுவை பதார்த்தங்களை யருந்தி உல்லாசமாக வாழ்ந்து வரும் நிலையில் இவ்வரசருக்கு அல்லாஹுதஆலா அளிக்கும் நற்பாக்கியத்தை துர்அதிருஷ்ட வசத்தால் பசிப்பிணிக்குட்பட்டு வாடிக்கிடக்கும் எவ்வெளியவரும் பெற முடியாது.

ஜீவனின் உயர்வு, ஆத்மசுத்தி, இச்சையைக் கட்டுப்படுத்தல், சக்தியைக் கண்காணித்தல், இன்பமுற வேண்டுமென்னும் உணர்ச்சியின் தியாகம் ஆகியவைகள் நோம்பின் அடிப்படைகளாகும். சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் உயிர்ப்பிராணிகள் யாவும் உண்மையாகவே ஜீவித்திருப்பதற்கு வேண்டிய உணவைக் கோரவேண்டிய நிற்பந்தத்திற்குள்ளாகி யிருக்கின்றன. ஆனதுபற்றியே பொறுமையின் பாடம், அடக்கத்தின் அறிவு, சிறப்பின் ஜனனம், கெடுதியை விட்டுத் தப்புவது, தியாகம் ஆகியவைகளை முன்னிட்டு நோன்புநோற்ப தன் மூலமாய் உணவு சம்மந்தமான அபேக்ஷையை துறக்கவேண்டுமென்று உத்திரவிடப்பட்டிருக்கின்றது. மேலும் அருவருக்கத் தக்க காரியங்

களை விடுவது, துர்குணத்தை விட்டு நீங்குவது, ஆத்மா சிறப்பெய்து வது முதலியவைகளுக்குரிய கருவி நோன்பு நோற்பதென்றே அறி வுறுத்தப் பட்டிருக்கிறது.

நோன்பு நோற்கும்படி இடப்பட்டிருக்கும் கட்டளையின் இறு தியில் ஷரீஅத்தின் வழக்கமான பாஷையில் பொருள் நிறைந்த பதத்தை இணைக்கப்பட்டிருக்கிறது. அஃதாவது:—"நீங்கள் 'தக் வா'வைப் பெறுவதற்காக நோம்பை விதிக்கப்பட்டிருக்கிறது," என் பதே. 'தக்வா' என்னும் பதத்திற்கு பத்தியங்காப்பது, தப்புவது ஆகியவைகள் பொருள் என்று கூறுகின்றனர். ஆனால் குர்ஆன்ஷரீபா னது இப்பதத்தினுள் எல்லா கெடுதிகளையும், இழிய கருமங்களையும் விட்டுதப்புவது பத்தியங்காப்பது என்னும் கருத்தையமைத்திருக் கின்றது. ஆகவே கெடுதியை விட்டுத் தப்பும்படி நமக்கு அறிவுறுத்து வதையே நோம்பெனக் கூறுவோம். ஆத்மசுத்தி, 'தக்வா' ஆகியவை களை நம்முள்உண்டுபண்ணுவதையே நோன்பென்றுகருதலாம். பொறு மை, தன்னடக்கம், கஷ்ட நிஷ்டூரங்களை சகித்துக்கொள்ளும் தன்மை ஆகியவைகளை அளிப்பதே நோம்பாகும். தேகபலம், கோபம் மனோ இச்சை ஆகியவைகளுள் நீதியை உண்டுபண்ணுவதே நோம்பாகும். நன்மையைப் புரிவதற்குரிய உணர்ச்சியையும், உண்மையில் பற்றும், நியாயத்தில் பிரீதியும், கெடுதியை விட்டுத் தப்புவதற்கான சக்தியும் நம்முள் உண்டுபண்ணுவதையே நோம்பென்று அழைக்கவேண்டும். மேலும் இவைகளே நோம்பின் லக்ஷியங்களாகும். நோம்பை யொட் டிய இந்த லக்ஷியங்களைத்தவிர்த்து, நோம்பைச்சார்ந்த மற்ற காரி யங்கள் மேற்கூறப்பட்டுள்ள லக்ஷியங்களை யடைவதற்கான கருவிக ளென்று கருத வேண்டும்.

ஆகவே நாம் நோற்கும் நோம்பின் மூலமாய் நம்முன் மேற் கூறிய லக்ஷியங்கள் ஜனனமாகாவிடின் இந்நோன்பை உண்மையில் நோம்பென்று கூறமுடியாது. மேலும் இந்நோம்பைப் பசிப்பிணி யென் றும், தாகவிடாய்த் தொந்திரை என்றும் கூறவேண்டும். கெடுதிகளை விட்டுத் தப்பு வதற்கான கண்காணிப்பானது நோம்பைச்சார்ந்த நற் பாக்கியத்தைப் பெறுவதற் கவசியமான நிபந்தனையென்று ஹதீது ஷரீப் எடுத்துக் காட்டுவதை உற்று நோக்கவேண்டாமா? "கெடுதியை விட்டுத்தப்புவதற்கான கண்காணிப் போடு எவன் ரமலான் மாதத் தில் நோம்புநோற்கின்றானோ? அவனுடைய முந்தியபாபங்கள் எல்லா வற்றையும் அல்லாஹு தஆலா மன்னித்து விடுவான்" என்று நாய கம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அருளியிருக்கின்றார் கள் (புகாரீ)

"இன்று நோம்பு நோற்பவர்களுள் எத்தனை நபர் நோம்பு நோற்பவர்க்குரிய பரிசுத்தமான வாழ்க்கையை யடைந்திருக்கக் கூடும்" என்று வினவுகின்றேன். ஜனங்களின் உரிமைகளை அபகரிப்பது, உறவினரை முன்னிட்ட கடமைகளை உதாசீனம் செய்வது, அல்லாஹுதஆலாவின் அடிமைகளைப் புறம் பேசுவது, பற்பலசூக்ஷி, ஏமாற்றம் முதலிய துர்க்கிருத்தியங்களைப் புரிவதோடு தொழுகிறவர்களையும், நோம்பு நோற்கிறவர்களையும் நான் அறிவேன். அந்தோ ! இப்பொல்லாதவர்களின் தேகத்தைச் சார்ந்த வயிறு பசித்திருக்கும் ஸ்திதியில் பாவத்தைச்சார்ந்த கொடிய கருமங்களின் மூலமாய் தங்களின் ஹிருதயத்தைச்சார்ந்த வயிறுகளை நிறப்பிக்கொள்ள அதி தீவறமாய் முற்படுகின்றனர். இத்தகைய நோம்பு நோற்போரை யொட்டியல்லவா "பசிதாகம் ஆகியவைகளைத் தவிற வேறு எதையும் பெறமுடியாத நோம்பை நோற்போர் எத்தனையோ பெயர் உண்டு" என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அருளியிருக்கின்றார்கள்? (நஸாயி, இப்னுமாஜா.)

*   *   *   *

அவர்கள் இராக்காலங்களில் "தராவீஹ்" தொழும் போது குர்ஆன்ஷரீபை செவியுறுகின்றனர். மேலும் காலையில் குர்ஆன் ஷரீபின் அத்தியாயங்களை ஓதி முடிக்கின்றனர். ஆனால் அக்குர் ஆன்ஷரீபு காட்டும்நேர்வழிகளைஅவர்கள் செவியுறுவதில்லை. மேலும் குர்ஆன்ஷரீபின் சப்தம் அவர்களின் தொண்டைக் குழிக்குக்கீழே இறங்குவதில்லை. அல்லாஹுதஆலாவை தியானிப்பதற்காகவும் குர்ஆன் ஷரீபை ஓதுவதற்காகவும் இராக்காலங்களில் நிற்பவர்களுள் எத்தனையோ பெயர் இரவில் கண் விழித்ததைத் தவிர்த்து வேறு எப்பயனையும் பெற முடியாதவர்களாக இருக்கின்றனர்," என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அருளியிருக்கின்றார்கள். (இப்னுமாஜா).

"குர்ஆன் ஷரீபை ஓதுகிறவர்களுள் பலரின்மீது குர்ஆன் ஷரீபானது சாபத்தை அனுப்புகிறது" என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அருளியிருக்கின்றார்கள். ஏனெனின்? அவர்கள் தங்களின் துற்கிருத்தியம், உதாசீனம் ஆகியவைகளின் மூலமாய் குர்ஆன்ஷரீபை ஓதுவது, அதை செவியுறுவது ஆகியவைகளை வீணானதாயும், விளையாட்டிற் குரியதாயும் ஆக்கிக்கொண்டனர்.

நோம்பு நோற்போர் அல்லாஹுதஆலாவின் தயை, நட்பு, பிரீதி ஆகியவைகளைப் பெறுவதற்கு பதிலாய் இவர்கள் அல்லாஹுதஆலாவின் அடிமைகளாகவிருக்கும் ஜனங்களுக்கு பேராபத்தாக

இருக்கின்றனர். ஆகவே அத்துஷ்டர்கள் நோன்பு நோக்காதிருந்தால் உத்தமமாக விருக்குமல்லவா? பகலெல்லாம் பசித்திருந்து இராக் காலங்களில் தராவீஹைத் தொழுது அவர்களுடையும் பெருமை, படா டோபம் ஆகியவைகளுக்கு எல்லை கிடையா. அவர்கள் இந்தச் செய் கையின் மூலமாய் அல்லாஹு தஆலாவுக்கும், அவனுடைய அமரர், அடியார் முதலியோர் மீதும் பெரும் உபகாரத்தைப் புரிந்து விட்ட தாய்க் கருதுகின்றனர். இவ்வுபகாரத்திற்குப் பிரதி உபகாரமாக சிறப்பு, உறுதி, தற்புகழ்ச்சி ஆகியவைகளைக் கொண்ட நிரந்தரமான நற்சாக்ஷிப் பத்திரம் அவர்களுக்கு கிடைத்து விட்டதாக வெண்ணி மகிழ்கின்றனர்.

பெரும் கீர்த்திக்குரியவர்களாகி விட்டதாகக் கருதி அவர்கள் மனிதர்களைக் கொன்று விட்டாலும் எவரும் தங்களை எறிட்டுப் பார்க்க முடியாதெனக் கூறுகின்றனர். மேலும் நோம்பு நோற்கும் அவ்வறிவிலிகள் நாளெல்லாம் காட்டு மிருகங்களைப்போலவும், கொடிய விலங்கினங்களைப் போலவும் ஜனங்களை அடித்துக் கிழித்துக் குவித்து விட்டு "நாங்கள் நோம்பு நோற்போர்" என்று பெருமையாய்த் தங்களை அழைத்துக் கொள்ளுகின்றனர். ஆகவே பூமி, வானம் ஆகியவை களை சிருஷ்டித்த அல்லாஹு தஆலாவுக்கு அவர்கள் பசித்திருக்க வேண்டுமென்னும் அவசியமில்லை யென்பதை அவ்வசடர்கள் நன் குணரவேண்டும். உண்மையை உணராது நோம்பு நோற்கும் அவ் வறிவீனர்களைக் காட்டினும் நோம்புநோற்காததைமுன்னிட்ட குற் றத்தை யொப்புக் கொள்ளும் பாவிகளைச் சிரேஷ்டர்களெனக்கூற லாம். இவர்கள் அல்லாஹு தஆலாவின் கட்டளைக் குட்பட்டு நோம்பு நோற்காவிடினும், இவர்கள் அல்லாஹு தஆலாவின் அடி மைகளுக்கு கஷ்டநிஷ்டூரங்களை உண்டுபண்ணா திருக்கின்றனரல் லவா?

மனதைக் கட்டுப் படுத்துவது, மனோ இச்சையை யடக்குவது முதலியவைகள் நோம்பின் லக்ஷியம் என்பதை யறியாத ஓ! கெட்ட மனிதனே!! நீ உணவை யுட்கொள்ளாமலும், ஜலத்தை யருந்தாமலும் நோம்பு நோற்று இரத்தம், மாமிசம் ஆகியவைகளை உட்கொள்ள சம்மதித்ததேனோ? "உங்களுள் எவரும் உங்கள் சகோதரனுடைய சவத்தின் மாமிசத்தை உட்கொள்ள முற்பட முடியுமா?" (அல் குர் ஆனின் வியாக்கியானம்).

ஏமாற்றம், மோசம் ஆகியவைகளை விட்டு நீங்காது, நோம்பிற் குரிய லக்ஷியத்தை யறிந்து ஒழுகாதோர் உண்ணுவதையும், குடிப் பதையும் ஒழித்து பசித்திருக்கும்படிச் செய்ய அல்லாஹு தஆலா

வுக்கு எத்தகைய அவசியமுமில்லை யென்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அருளியிருக்கின்றார்கள். (புகாரீ)

நீங்கள் புரியும் குர்பானியின் மாமிசம், இரத்தம் ஆகியவைகள் அல்லாஹுதஆலாவின் சமூகத்தையடையவில்லை. ஆனால் உங்களுடைய எண்ணம், 'தக்வா' ஆகியவைகள் மட்டுமே அல்லாஹுதஆலாவின் சமூகத்தை யடையும்.'' (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

குர்பானியின் மாமிசம் அல்லாஹுதஆலாவின் சமூகத்தை யடையவில்லை யென்று அறிவிக்கப்படும் ஸ்திதியில் வணக்கத்தைப் புரிவோரென்னும் அகத்தைக் கொண்டிருக்கும் வீணர்களே! ஜனங்களைத் தொந்திரவுக் குட்படுத்தும் நோம்பு நோற்பவர்களே!! உங்களின் பசிப்பிணியும் தாகவிடாயும் அல்லாஹுதஆலாவின் சந்நிதானத்தை யடையுமா? ஆனால் சந்தேகமின்றி உங்கள் ஹிருதயமும் எண்ணமும் அல்லாஹுதஆலாவின் பாதத்தை யடையமுடியும். ஹிருதயம், எண்ணம் ஆகியவைகள் அல்லாஹுஆதலாவின் சமுகத்தில் அடைவது என்னும் பெரும் பேற்றிற்குரியனவாக யில்லாது போயின் நீ புரியும் வணக்கத்தைச் சார்ந்த முயற்சி, கஷ்டநிஷ்டூரம் முதலியவைகள் பலனற்றன வென்றே கூற வேண்டும்.

நோம்பு நோற்காமல் அல்லாஹுதஆலாவின் கட்டளையை உதறித்தள்ளிவிட்டோர், நோம்பை நோர்த்து அதன் உண்மையை உணர்ந்து பலனெய்தாதோர் ஆகிய இருவகுப்பினரை யொட்டி இவ்வுதாரணத்தைக் கூறலாம். அஃதாவது:-இரண்டு மாணவர்களுள் ஒருவன் கலாசாலைக்குப் போகாமல் வீட்டில் தங்கிவிடுகின்றான். மற்றொரு மாணவன் கலாசாலைக்குச் செல்லுகின்றானாயினும் அக்கலாசாலையில் கல்வி கற்பதற்கு பதிலாய் விளையாட்டில் கவனம் செலுத்துகிறான். முதலாவது மாணவன் கலாசாலைக்குச் செல்லாதிருப்பதை முன்னிட்டு கல்விகற்காமலிருந்து விடுகின்றான். ஆனால் கலாசாலைக்குச் செல்லும் மற்ற மாணவனும் கல்வி கற்கவில்லை. கலாசாலையை யடையாமல் வீட்டில் தங்கியிருக்கும் மாணவனைக்காட்டினும் கலாசாலைக்குப் போகும் மாணவனை உத்தமனென்று கூறலாமாயினும் இம்மாணவன் கலாசாலைக்குச் சென்று மற்றோருக்குக் கஷ்டத்தை யுண்டுபண்ணி வருவானாயின் இம்மாணவனும் கலாசாலைக்கு செல்லாதிருப்பது உத்தமமல்லவா?

* * *

(தொடரும்.)

மூமின்களும் நற்செய்கையும்.

(111-வது பக்கத்தொடர்)

ஹஜ்ரத் ஜமாலுத்தீன் (அப்கானீ) அவர்களை நோக்கி ஒருமனிதர் "முஸ்லிம்களின் க்ஷீணதெசைக்குக் காரணமென்ன?" வென்று வினவியதற்கு ஹஜ்ரத் அவர்கள், முஸ்லிம்கள் தங்கள் மதத்தைக் கைவிட்டதைமுன்னிட்டு க்ஷீணித்துவிட்டதாகக்கூறினார்கள். "பிறகுகிருஸ்தவர்களின் முன்னேற்றத்திற்குக் காரணம் யாது?" என்று அவர்மீண்டும் ஹஜ்ரத் அவர்களைக் கேட்டபோது ஹஜ்ரத் அவர்கள்:—"கிருஸ்தவர்கள் தங்கள் மதத்தைக் கைவிட்டதன் பயனாகவே (கிருஸ்தவர்கள்) முன்னேற்ற மெய்தினர்" என்று ஹஜ்ரத் அவர்கள் விடைபகர்ந்தார்கள். இவ்விடைகளைச் செவியுற்ற மனிதர் ஆச்சரியமடைந்து, ஓரேவிதமான செய்கை ஒன்றுக்கொன்று முரணான நிலையை உண்டு பண்ணமுடியுமா? ஒரு காரியம் நல்லதாயின் இருசாராருக்கும் நன்மையாக விருக்கவேண்டியது போல் ஒரு காரியம் கெடுதியாயின் இரு சாராருக்கும் கெடுதி யாகத்தானே இருக்க வேண்டும்? என்று ஹஜ்ரத் அவர்களைக் கேட்டார். அதற்கு ஹஜ்ரத் அவர்கள் "இஸ்லாமானது உலக ஆக்ஷி, உலக சமாதானம் ஆகியவைகளுக்கு வேண்டிய ஒழுங்கு முறையைக் கொண்டிருக்கிறது. ஆனால் கிரிஸ்து மதம் இதற்கு மாற்றமானதாக இருக்கின்றது. ஆகவே முஸ்லிம்கள் தங்களின் மதத்தைக் கைவிட்டவன்றே உலக வாழ்க்கை சம்மந்தமான கீர்த்தி தானாகவே அகன்று போயிற்று. ஆனால் கிரிஸ்தவர்கள் தங்கள் மதத்தை விட்டதன் பயனாக உலக வாழ்க்கைக்கு வேண்டிய சாதனங்கள் யாவும் அவர்களின் பிரயாசையின்றியே அவர்களுக்குக் கிட்டிவிட்டன. கிரிஸ்து மதம் உலக வாழ்க்கையைத் துறந்துவிடவேண்டு மென்றும், சன்னியாசத்தைக் கடை பிடிக்க வேண்டுமென்றும் கூறுகின்றது. மேலும் சில வணக்கங்களைக் கற்பிப்பது மட்டுமே கிரிஸ்து மதத்தின் முடிவாகும். ஆனால் இஸ்லாமானது இம்மை, மறுமை ஆகிய இருவாழ்க்கைக்கும் வேண்டிய எல்லா சட்ட திட்டங்களுமுள்ள ஒரு பலமான மதமாகும்." என்று விடை பகர்ந்தார்கள்.

அல்லாஹ்வின் துரோகி.

கட்டளையிடுகிறவர்களுக் கெல்லாம், கட்டளையிடுகிறவன் அல்லாஹ், தானென்னும் கொள்கையை முஸ்லிம்கள் கொண்டிருக்கவேண்டும். அல்லாஹுதஆலாவின் வேத மொன்றே முஸ்லிம்களை ஆக்ஷி

புரியமுடியும். 'குர்ஆன்ஷரீபு' தான் முஸ்லிம்களின் பரிசுத்தமான சட்டபுஸ்தகமாகும். உண்மை இவ்வாறிருக்கும் ஸ்திதியில் அல்லாஹுதஆலாவின் கட்டளையை மனப்பூர்வமாய் அனுஷ்டானத்தில் ஏற்றுக் கொள்ளாமல் வாயளவில் 'ஈமான்' கொண்டிருப்பதாய் உச்சரித்துக் கொண்டிருப்போரும், மனிதர்களியற்றிய சட்டத்தை மீறி குற்றங்களைப் புரிய நடுங்கும் ஸ்திதியில் அல்லாஹுதஆலாவுக்கு அஞ்சாதிருப்போரும், அல்லாஹுதஆலாவின் ஏவல், விலக்கலைச் சார்ந்த காரியங்களை மதியாதிருப்போரும், ஈமான், இஸ்லாம் ஆகியவைகளை மெய்ப்பிப்பதற்குரிய தொழுகை, ஜிஹாத், ஆகியவைகளை யலக்ஷியஞ் செய்திருப்போரும் உண்மையில் அல்லாஹுதஆலாவுக்கும், முஸ்லிம்களுக்கும் துரோகி என்றே தீர்மானிக்கப்பட்டிருக்கின்றனர்.

இஸ்லாமிய உலகம் பற்பல கஷ்டநிஷ்டூரங்களுக்குட்பட்டுத்துடித்துக்கொண்டிருக்கும் இந்நாளில், இஸ்லாமிய விரோதிகள் முஸ்லிம்களை அடிமை விலங்குகளால் கட்டி துன்புறுத்திக் கொண்டிருக்கும் இந்நாளில் முஸ்லிம்களை யழித்து விடுவதற்காக இஸ்லாமிய விரோதிகள் ஒன்றுபட்டிருக்கும் இந்நாளில், ஹலாலான வஸ்துவை உட்கொள்ள வேண்டுமென்னும் உத்திரவுக் குட்படாதிருப்போரும், ஹலால், ஹராம் என்னும் பதத்தை விவரிக்கும் சட்டதிட்டங்களை மீறி நடப்போரும், பூசாரிகளாய் அல்லது ஆராதனை செய்யப்படும் விக்கிரகங்களாய் அமர முயலுவோரும் தங்களை முஸ்லிம்களென்று அழைத்துக்கொள்வது நியாயமா? மனிதர்களை அடிமை வாழ்க்கையை விட்டு மீட்பதற்காகவும், விக்கிரகங்களையும், மனிதர்களையும் ஆராதனை செய்யும்படி கட்டளையிடும் ஆக்ஷியை ஒழிப்பதற்காகவும், உலகத்தை அல்லாஹுத ஆலாவுக்குத் தலை வணங்கும்படிச் செய்யவும், தோன்றிய இஸ்லாமைப் பாதுகாக்கும் பெருமை அத்தீயோருக்குண்டா? மானக் கேடான இழிய ஸ்திதியில் காலங்கழிக்க இஷ்டப்படுவோர் தங்களை முஸ்லிம்களென்று அழைத்துக்கொள்ள உரிமையுண்டா? இஸ்லாம் பகைவர்களைக்கூட ஒன்று படுத்தி சகோதரர்களாக்கி விட்ட ஸ்திதியில், குர்ஆன்ஷரீபை அலக்ஷியஞ் செய்து நற்காரியங்களைப் புரிவதாலேற்படும் கஷ்டத்தை விட்டுத் தப்புவதற்கு முஸ்லிம் சகோதரர்களை யெதிர்த்து பகைவராய்ப் பாவித்துக் கொண்டிருப்போர் தங்களை முஸ்லிம்களென அழைத்துக்கொள்ள வெட்கப்படமாட்டார்களா? முஸ்லிம்கள் தங்களின் உண்மையான கடமைகளை நிறைவேற்ற வேண்டுமென்று இஸ்லாம் முஸ்லிம்களை நோக்கி எச்சரிக்கு மிந்நாளில், இஸ்லாமைக் காப்பாற்றுவதற்காக

முஸ்லிம்கள் தங்கள் இரத்தத்தின் கடைசி துளியைக்கூட செலவிட்டு விட வேண்டுமென்று இஸ்லாம் அறிவித்துக் கொண்டிருக்கும் நாளில் நற்செய்கைகளின்றி ஈமானைமட்டும் கொண்டிருப்பதாய்க் கூறிக்கொள்வோர், தன்னை யறியாமலே பெருந் தூக்கத்தில் சிக்குண்டிருக்கின்றனர்.

தொழுகையும், நோம்பும்.

தொழுகையும், நோம்பும் அல்லாஹுதஆலாவின் உத்திரவுகளே யாகும். ஆனால் அவ்வுத்திரவுகளைப்பின் பற்றுவதோடு "ஹிஜ்ரத், ஜிஹாத்" முதலிய பெரும் கட்டளைகளுக்குட்பட்டு வேலைசெய்யாதவரை எவரும் உண்மை முஸ்லிமாகமுடியாது. அல்லாஹுதஆலாவின் இவ்வரிய கட்டளைகளையேற்று நடந்துகொள்ள இஷ்டப்படாதோர் இஸ்லாமை இழிவுபண்ணுவதற்காவே பற்பல கொடியவடுக்களாக உலகில் ஜீவித்திருக்கின்றனர். இத்தீயோர் இஸ்லாமின் கௌரவத்தைக் கெடுக்கும் வடுக்களாக எது வரையிருப்பார்களோ? அறியக்கூடவில்லை. இஸ்லாமின் பகைவர்களை யொழிப்பதற்காக முயற்சித்துக் கொண்டிருப்பவர்களே உண்மை முஸ்லிம்களாகும்.

நற்செய்கையைப்புரிய முஸ்லிம்களழைக்கப்படுகின்றனர். மனிதர்களுக்குச்சிறப்பை யளிக்கக் கூடியது நற்செய்கைதான்" என்று குர்ஆன்ஷரீபு தீர்மானித்து, இத்தீர்மானத்தின் மூலமாய் இம்மை மறுமை ஆகிய இருவாழ்க்கைக்கும் வேண்டிய சாதனங்களை இஸ்லாம் முஸ்லிம்களுக்கு அளித்திருக்கின்றது.

முஸ்லிம்களே! தூக்கத்தை யொழித்து விடுங்கள். படுக்கையை விட்டு எழுந்து நில்லுங்கள். லக்ஷியத்தைப் பெறுவதற்காக முற்படுங்கள். அல்லாஹுதஆலாவால் சிருஷ்டிக்கப் பட்டிருக்கும் வஸ்துக்களை மற்றவர்களைப்போல் நீங்களும் உபயோகிப்பதற்கு வேண்டிய சக்தி உங்களுக்கும் அளிக்கப் பட்டிருக்கின்றது. ஆகவே நீங்களும் அவ்வஸ்துக்களை அனுபவித்தாலென்ன?

முஸ்லிம்களே!, தூக்கத்தை விட்டெழுந்து வழிநடக்க முற்படுங்கள். உலக ஜனங்களின் மரணம் அல்லது ஜீவன் ஆகிய இரண்டும் உங்கள் ஈமானைப் பொருத்ததாக விருக்கின்றன. கஷ்டநிஷ்டூரங்களைக் கண்டு நம்பிக்கை, தைரியம் ஆகியவைகளை இழந்து விடாதீர்கள். அல்லாஹுதஆலாவின் உதவியைப் பெற்று உலகம் க்ஷேமமடையும் படிச் செய்யக்கூடிய சக்தியுள்ள முஸ்லிம்களே! உங்களுக்கு இராஜ்யத்தையும், நற்பாக்கியத்தையு மளிக்க அல்லாஹுதஆலா தயாராக விருக்கின்றான். ஆகவே அசத்தியம், அநியாயம், மாயை முதலிய இருளையும் வெறும் விக்ரகங்களையும் ஒழித்து உலகில் அமைதி, சத்தி

யம், நியாயம், உண்மை ஆகியவைகளை நிலைநிறுத்தும் பொருட்டு வேலை செய்ய வெளிக்கிளம்ப மாட்டீர்களா? இன்றேல் உங்களை முஸ்லிம்களென்று அழைத்துக்கொண்டு நீங்கள் அல்லாஹு தஆலா வின் முனிவுக் கிரையாகக் கடவது. அல்லாஹு தஆலா முஸ்லிம் களுக்கு நல்லறிவை யூட்டுவானாக. ஆமீன்.

ஹஜ்ஜுக்குச் செல்லுவார்களா?

மக்கமாநகர் சென்று ஹஜ்ஜு செய்யவும் மதீனமா நகரையடைந்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் "ரௌலா" ஷரீபை ஜியாரத் செய்யவும் முடியாமல் இருந்து வந்த இடுக்கண்கள் யாவும் இன்று நீங்கிவிட்டன. சிறப்புற்ற ஹஜ்ஜு, நட்புக்குரிய ஜியாரத் ஆகியவைகளுக்கு இன்று எத்தகைய இடையூறுங் கிடையாது. சுல்தான் இப்னுஸுஊத் அவர்கள் ஹிஜாஸ் முழுவதையும் கைப்பற்றிக் கொண்டார்கள். சுல்தான் அவர்களைத் தவிற வேறு எவருக்கும் இன்று ஹிஜாஸில் செல்வாக்குக் கிடையாது.

ஹிஜாஸ், என்னும் பரிசுத்தமான பூமியானது ஷரீபின் ஆதிக்கத்திற் குட்பட்டிருந்த போழ்து மக்கமாநகரை யடையும் ஹாஜிகள் சொல்லொணுத் தொந்தரையை அனுபவித்து வந்தனர். பற்பல கஷ்டநிஷ்டூரங்களுக்கிடை ஹாஜிகள் ஹஜ்ஜை நிறைவேற்றிக் கொண்டாலும், மதீனு சென்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம் அவர்களின் பரிசுத்தமான ரௌலாஷரீபை ஜியாரத் (தரிசனம்) செய்ய முடியாதிருந்தனர். மதீனு முனௌவராவுக்குச் செல்லவேண்டு மென்று ஹாஜிகள் பன்மடங்கு ஒட்டகைக் கூலி கொடுத்தும் நடுவழியில் ஒட்டகைக்காரர்கள் ஹாஜிகளை ஏற்றிச் செல்ல மறுத்துவிட்டதை முன்னிட்டு கால்நடையாய் பெரும் வேதனைக்குட்பட்டு மக்கமாநகருக்குத் திரும்பிவந்த வரலாற்றை நினைக்கும்போது மனம் பதைக்கின்றது. ஒட்டகைக்கு அதிகக் கூலி கொடுத்து மதீனமா நகரை நோக்கிச் செல்லும் ஹாஜிகள் வழியில் பதவிகளின் அட்டூழியத்திற்காளாகி பொருளைப் பறிகொடுத்த துக்க சம்பவங்களை நாம் கேள்விப்படவில்லையா? ஒட்டகைக்குப் போதிய கூலி கொடுத்து ஒட்டகை மேலேறி சில 'மன்ஜில்' வரைச் சென்ற ஹாஜிகள் பதவிகளால் வழிமறிக்கப்பட்டு ஹாஜிகள் தலா 1-க்கு ஒரு பவுன் வீதம் பதவிகளுக்குக் கொடுக்கும்படி நேர்ந்ததை மறக்கவியலுமா? இந்த ஹாஜிகள் இன்னும் சில மன்ஜிலைக் கடந்த பின்னர் பதவி களுக்கஞ்சி சுல்தானியா பாதையைவிட்டு கல், முள் நிறைந்த செங்

குத்தான வழியில் கால்நடையாய்ச்செல்ல நேர்ந்ததல்லவா? ஹாஜிகளின் உயிர், பொருள் ஆகியவைகள் பாது காக்கப்படாமலிருந்ததாலும், போதிய ஜலவசதி யற்றிருந்ததாலும், சுகாதார மின்மையாலும் பல்லாயிரக் கணக்கான ஹாஜிகள் உயிர்துறந்தன ரல்லவா?

ஆகவே இத்தகைய கஷ்ட நிஷ்டூரங்களுக்கும் முஸ்லிம் உலகத்தின் கவலைக்கும் காரணமாகவிருந்த ஷரீபின் ஆக்ஷி ஹிஜாஸைவிட்டுத் தொலைந்து போனதை முன்னிட்டு உலகமுஸ்லிம்கள் அல்லாஹு தாலாவுக்கு 'ஷுக்ர்', செய்யக் கடமைப்பட் டிருக்கின்றனர். மேலும் இந்நெருக்கடியான நாளில் முஸ்லிம்கள் தங்களின் ஷுக்ரிய்யாவை செய்கையில் காட்டவேண்டும். ஷரீபுடைய ஆக்ஷியின் அதிக்கிரமத்தைப் பொறுக்கமுடியாமல் ஹிஜாஸைவிட்டு வெளியேறியிருந்த ஹிஜாஸ் வாசிகள் இன்று ஹிஜாஸுக்குத் திரும்பி வந்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஹிஜாஸ் வாசிகளின் கஷ்டத்திற்கெல்லை கிடையாது. ஆகவே இமாமுல் ஹிந்து மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் கான்பூர் கிலாபத் கான்பரஸின் அக்கிராஸனப் பிரசங்கத்தில் கூறியுள்ளவாறு நம் நாட்டைச் சார்ந்த ஒவ்வொரு பாகத்திலிருந்தும் ஏராளமான முஸ்லிம்கள் இவ்வருடம் ஹஜ்ஜுக்குச் சொல்லும்படி எல்லா முஸ்லிம்களும் வேலைசெய்யக் கடமைப்பட் டிருக்கின்றனர். ஹஜ்ஜு செய்ய கடமைப்பட் டிருக்கும் முஸ்லிம்கள் ஹிஜாஸ்வாசிகளின் கஷ்ட நிவாரணையைக் கருதி இவ்வருடமே ஹஜ்ஜுக்குச் செல்லவேண்டும்.

ஹஜ்ஜு விதியாகவுள்ளவர் இனி எத்தகைய புகலையுங்கூறி தப்ப முடியாது. மேலும் இவர்கள் அல்லாஹு தாலாவின் சமுகத்தில் மன்னிக்கப்படுவதற்கு எதுவும் நியாயமிருப்பதாய்த் தெரியவில்லை.

சுல்தான் இப்னுஸுஊத் அவர்கள் ஹஜ்ஜாஜிகளின் சௌகர்யத்தைக் கருதி செய்துவரும் ஏற்பாடுகளுக் கெல்லை கிடையாது. ஜித்தாவிலிருந்து மக்கமா நகருக்குச் செல்லும் ஹாஜிகளை ஏற்றிச் செல்லுவதற்காக பல மோட்டார் பஸ்ஸுகள் தயாரிக்கப்பட் டிருப்பதாயும் ஹாஜிகள் ஜித்தாவிலிருந்து சில மணி நேரங்களில் மக்கமா நகரை யடைந்துவிடுவார்க ளென்றும் அறிவிக்கப்படுகின்றது. ஹாஜிகளின் சௌகர்யத்தை யொட்டிய காரியங்களை சுல்தான் இப்னுஸுஊத் அவர்கள் தாங்களே நேரில் கவனிப்பார்களென்று தெரிய வருகிறது. ஆகவே மற்ற காலங்களைப் போலன்றி இவ்வருடம் குறைந்த செலவில் ஹஜ்ஜை நிறைவேற்ற முடியுமென்பது நிச்சயம். ஹிஜாஸ் வாசிகளின் கஷ்ட நிவாரணை நிதிக்கு ஒவ்வொரு கிராமங்களிலும் 'ஜகாத்' 'பித்ரா' 'சதகா' முதலிய தொகைகளை வசூலித்து

19

அந்தந்த கிராமங்களிலிருந்து ஹஜ்ஜுக்குச் சொல்லுகிறவர்களிடம் கொடுத்தனுப்புவது சிலாகிக்கத் தக்கதாகும். தஞ்சை ஜில்லா பண்டாரவாடை வாசிகள் வழக்கம்போல் இப்பெரும் வேலையை ஆரம்பித்து மற்றவர்களுக்கு வழி காட்டுவார்களா?

ஜனாப் மணியாலீகா, அப்துல்கரீம் ராவுத்தர், ஜனாப்நா, இப்ராஹீம் ராவுத்தர் முதலிய, பலர் இவ்வருடம் ஹஜ்ஜுக்குச் செல்ல வேண்டுமென்னும் முயற்சி கைகூடும்படி அல்லாஹுத ஆலா கிருபை புரிவாளுக. ஆமீன்.

ஜகாத்துத் தொகையைப் பெற இவ்வருடம் ஹிஜாஸ் வாசிகளே அதி உரிமை யுள்ளவர்களாதலின் ஜனாப் ஹாஜிரா. இ. முஹம்மத் காஸிம் ஜனாப் ந. மு. காஜாமியான். ஜனாப் கொ. ப. முஹம்மத் காஸிம் முதலியோர் கொடுக்கும் ஜகாத்துத் தொகையில் ஒரு பாகத்தை யேனும் ஹிஜாஸுக்கனுப்புவார்களென்று நம்புகிறோம்.

தப்புகள் அடிப்பதும் பொதக்குடியின் தப்பான பத்வாவும்.

(120-வது பக்கத் தொடர்ச்சி)

“ஷரஹ்பிக்ஹுல் அக்பர்” அகீதாபதரபாதலின் இந்த ‘மஸ்அலா’ அகீதாவைச் சார்ந்ததென்று கனம் அப்துல் கனிய்யி சாஹிப் கூறுவது வேடிக்கையாக விருக்கிறது. அக்கிதாபில் அகீதாவைச் சாராத அநேக விஷயங்கள் வரையப்பட்டிருக்கும் இஸ்திதியில் அக்கிதாபில் வரையப்பட்டிருப்பதெல்லாம் அகீதாசம்மந்தமானவைதான் என்று இவர் கூறுவதை ஏற்றுக்கொள்வதெங்ஙனம்? ஆகவே அகாரணமாய் இவ்வாறு தாவீல் செய்கிறார் என்பது நிச்சயமாகிவிட்டது. அவைகளைப்பற்றி விவரிப்பதாயின் நீண்டுவிடும். ஆதலின் நாம் ஒரு சபையில் அவைகளை இலகுவாய்ப் பேசி முடித்துக்கொள்ளலாம். இதற்கு கூத்தாநல்லூர் பெரிய பள்ளிவாசல் பஞ்சாயத்து சபையும் உசிதமானதென்று கருதுகின்றோம்.

மேலும் அதேவிடத்தில் அல்லாமா முல்லா அலிய்யுல்காரி அவர்கள் சொல்லியிருப்பதாவது:—“யாதொருவன் குர்ஆனை தப்பு, (அல்லது) கோலாட்ட அடிக்கு நேராய் ஓதுவானுல் காபிர் ஆய்விடுவான்” என்பதே. இவ்வாக்கியத்திற்கும் இப்படித்தான் தாவீல் செய்வாரோ? வீண் விளையாட்டின் நாட்டத்தைக்கொண்டு தப்படித்து விளையாடுவது ஹராமாயிருப்பதை ஹலாலென்று நிர்ணயம் கொண்

டால்தான் குப்ரு ஏற்படும் என்று இதற்கும் தாவீல்வாராயின், ஒரு வன் அவ்வாறு தப்படித்து அதற்குத்தோதாய்க் குர் ஆன் ஓதுவதை நன்மையான காரியம் என்று கருதிச் செய்வானுயின் அவனுக்கு குப்ரு ஏற்படாதா ? இப்படியெல்லாம் தாவீல் செய்து மஸ்அலாக்க ளைக் கெடுப்பது தவறல்லவா ?

இவ்விடத்தில் முல்லா அலிய்யுல்காரி (றஹ்) அவர்கள் குர்ஆன், திக்ரு நாயகத்தின் புகழ், இவைகளை ஓதி தப்படிப்பதால் குப்ரு உண் டாகும், என்று கூறியிருக்கிறார்கள். மிர்காத்தில் தப்பு அடிக்கு மத் தியில் பாடுவது மக்ரூஹ் என்று சொல்லியிருக்கிறார்களே, இவை இரண்டுக்கும் பொருத்தம் என்னவெனின் ? "மிர்காத்தில்" வரையப் பட்டிருப்பதன் கருத்தாவது.—குர்ஆன், திக்ரு, நாயகத்தில் புகழ், அல்லாத சாதாரண விஷயங்களைக்கொண்ட பாடல் பைத்துகளா யிருக்கும்.

இராகம் பாடிக்கொண்டு தப்படிப்பதாகுமென்று கூறுகிறவர்கள் காட்டிய ஆதாரங்கள் ஏற்கத்தக்கதல்ல வென்பது மேற்கூறிவந்த விஷயங்களின் மூலமாய் தெளிவாகிவிட்டது. அல்லாமலும் அரபி பாஷையிலுள்ள கிரந்தங்களைப் பார்த்தறிய முடியாதோர், ஷெய்குனு ஹஜ்ரத்து யூசுபுலெப்பை ஆலிம் சாஹிபு அவர்கள் அரப் தமிழில் எழு தியுள்ள கிதாபுகளின் மூலமாய் உண்மையைத் தெரிந்துகொள்ளலாம்.

ஹஜ்ரத்தவர்கள் தூருல்ஹிஸானில் எழுதி யிருப்பதாவது:— கலியாணத்தில் தப்படிப்பது குற்றமில்லை. பெருநாளையும், துவர்க் கத்தில் பிள்ளை பெறும் போதையும், கத்னுவையும், குர் ஆன் பாடம் முடிப்பதையும், சபரில் நின்றும் முன்னேக்குகிறதையும், சந்தோஷத் திற்கு சிநேகிதர்கள் சேகரமாகுமிடத்தையும் நிகாஹுடன் சேர்க் கப்பட்டிருக்கிறது. அதுகளிலும் தப்படிப்பது ஆகும். ஆனால் அதற்கு கிலுக்குகளுண்டா யிருக்கவில்லை யானாலும், அதை இராகத் துடைய கோலத்தில் அடிக்கப்படவில்லை யானாலுந்தான் ஆகும், என் பதே. இன்னும் ஹஜ்ரத்தவர்கள் இது விஷயத்தை அநேக விபரங்க ளுடன் "யவாக்கீத்துல் பலாஹ்" 191 வது பக்கம் முதல் 196வது பக்கம் வரை எழுதியிருக்கின்றார்கள்- புதூஹாத்துல்ஸலாத்திலும் இது சம்மந்தமான பல விபரங்களும் கூறப்பட்டிருக்கிறது. அவை களை கவனித்து இம்மஹான்களின் அபிப்பிராயத்தை யறிந்து முஸ் லிம்கள் நடந்து கொள்ளவேண்டும்.

இதுவரை எழுதபட்டவைகள் யாவும் நிகாகிலும் அதுபோ லொற்ற சந்தோஷக்கிரிகைகளிலும் தப்படிப்பதை யொட்டியதாகும். இது தவிர வேறு நேரங்களில் தப்படிப்பதைப்பற்றிய விபரங்களை

அடியில் வரைகின்றோம். சாதாரண நேரங்களில் தப்படிப்பது "ஹறாம்" என்பதுதான் இமாமுல் அஃலம் அபூஹனீபா (றஹ்) அவர்களின் "மத்ஹபாகும்" இதையே உலமாக்களுள் பெரும் பான்மையோர் அங்கீகரித்திருக்கிறார்கள். தப்படிப்பதோடு பாடுவதையும் ஆகுமென்று கூறும் சில சூபியாக்களும் அதற்குப்பல ஷரத்துகளைப் பகர்ந்திருக்கிறார்கள். அவை எல்லா ஷரத்துக்களையும் இச் சிறிய நூலில் விவரிக்க முடியாதிருக்கிறது. ஆதலின் அவைகளில் முக்கியமான ஷரத்துகளை மட்டும் இதில் குறிப்பிடுகின்றோம்.

ஷரத்துகளாவன:—அப்படி தப்படிக்கும் கூட்டத்தார் எல்லாரும் ஷரீ அத்தில் அவசியமானவைகளைத் தெரிந்து அதின்படி நடந்து வரவேண்டும். அவர்கள் விளையாட்டுக் காரியங்களை விட்டொழிந்திருக்கவேண்டும். அவர்களில் முகவரைகீறாத வாலிபர்கள் இருக்கக் கூடாது. ஷரீ அத்துக்கு மாற்றமாய் நடப்பவர்களதில் இருக்கக் கூடாது. அதற்காக கூலி வாங்கவும் கூடாது. ஜனங்கள் புழங்கும் படியான இடங்களில் அடிக்கக் கூடாது. ஏனெனின் இந்த ஷரத்துக்களில் சேராதவர்கள் தப்புச் சத்தத்தைக் கேட்காதிருக்கும் பொருட்டே, தொழுகையுடைய நேரங்களிலும் அடிக்கக்கூடாது இன்னுமனேக ஷரத்துக்களும் கூறியிருக்கிறார்கள். இது விபரங்கள் "றத்துல் முக்த்தார்," "பதாவா கைறிய்யா," பதாவாஹாமிதிய்யா" முதலிய கிரந்தங்களில் வருகின்றன.

நமது தேசத்தில் நிகாஹு அல்லாத நேரங்களில் தப்படிப்பதைப்பற்றி கவனிப்போம். மேலே கூறப்பட்ட ஷரத்துகளில் அநேகத்தை யிழந்திருப்பவர்களே நம் தேசத்தில் தப்பு அடிக்கின்றனர். தொழுகையில்லாதவர்களும், விளையாட்டுப் பிரியர்களும், முகவரை கீறாத வாலிபர்களும், ஷரீ அத்துக்கு மாற்றமாய் நடப்பவர்களும் பலர் சேர்ந்துவிடுகிறார்கள். பாதைக்கரைகளிலும் மஸ்ஜிதுக்கு சமீபத்திலும் வைத்து அடிக்கப்படுகிறது. அதனால் பலரும் அதைக் கேட்க நேரிடுகின்றது. தொழுகை நேரங்களில் அடித்துவிடுகிறார்கள். ஆகையால் பலவாறாய் ஷரத்துக்களிழந் திருக்கிறது. ஆகுமென்று சொன்னவர்களின் சொல்படிக்கும் ஷரத்துக்களிழந்திருப்பதால் இப்போது அடிக்கப்படும் தப்பு ஹறாமென்றே நிச்சயமாய்விட்டது. இது சம்மந்தமாகத் தனியே ஒரு நூல் எழுத உத்தேசித்திருக்கிறோம். வல்லநாயன் பூர்த்தியாக்கி வைப்பானாகவும். நாயனே! முஸ்லிம்களை இத்தீச் செயல்களை விட்டுக்காப்பாற்றுவாயாக.

தப்புகள் அடிப்பதும், தேவ்பந்து மத்ரஸாவின் பத்வாவும்.

நிகாஹுக்களில் தப்படிக்கும் விஷயமாய் தேவ்பந்து உலமாக்களிடம் அடியில் வருமாறு வினவப்பட்டது:—

சுவால்

சில வாலிபர்கள் தப்படிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். நிகாஹு இரவு அரபி, ஹிந்தி, தமிழ் பாடல்களைப் பாடிக்கொண்டு அதற்குத் தோதாய்த் தப்படிக்கிறார்கள். தெருத் தெருவாய் சுற்றுகிறார்கள். அதற்காகக் கூலியும் வாங்குகிறார்கள். இத்தகைய செயல் ஹனபிய்யாக்களிடத்தில் ஆகுமா? ஆகாதா? கற்றறிந்த உலமாக்களே! இதனை பயான் செய்து அல்லாஹுத ஆலாயிடத்தில் நற்கூலி பெறுவீர்களாக.

இதற்குத்தரமாக சங்கை வாய்ந்த தேவ்பந்து உலமாக்கள் அடியில் கண்ட ஜவாபுகள் எழுதியிருக்கின்றார்கள்.

ஜவாபாவது:—

நிகாஹை பிரபல்லியப் படுத்துங்கள். அதைப் பள்ளியில் வைத்துச் செய்யுங்கள்: அதின்பேரில் தப்பு அடியுங்கள் என்று ஹதீதில் வந்துவிட்டது. ஆகையால் நிகாஹை பிரபல்லியப்படுத்துவதற்காகத் தப்பு அடிப்பது ஜாயிஸானதாயிருக்கிறது. நிகாஹைப் பிரபல்யப்படுத்துவதற்கின்றி அனுவசியமாய் தப்படிப்பதும், அதன்பேரில் பாடல்கள் பாடுவதும் ஜாயிஸ் ஆகமாட்டாது.

றபீஉல் அவ்வல்மீ 1344	எழுதியவர் அஸீஸுர் ரஹ்மான், அபா அன்ஹு தேவ்பந்து தாருல் உலூம், முப்தி

நிகாஹில் நமது தேசத்தில் அடிக்கப்படும் தப்பை இந்த பத்வாவுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம். நிகாஹுக்கு முன் அநேக சடங்குகள் நடைபெறுகின்றன. அவைகளைக் கொண்டு இன்ன மாப்பிள்ளைக்கு இன்ன பெண்ணை விவாகம் செய்யப் போவதாக பகிரங்கமாய் விடுகிறது. தப்படிப்பதனால் புதிதாய் எவரும் தெரிந்துகொள்வதொன்றுமில்லை. இப்பொழுது அடிக்கப்படும் தப்பு நிகாஹை பிரபல்யபப்டுத்துவதற்காக இல்லையென்பது தெளிவாகிவிட்டது. ஆகவே இவ்வகையிலும் தப்படிப்பது ஆகாதென்று ஏற்பட்டுவிட்டது. காரணமில்லாமல் அடிப்பது வீண் வேலையல்லவா? வீணாக தப்படிப்பதை ஆகாதென்று M. அப்துல்கனி சாஹிபுங்கூட ஒத்துக்கொண்டிருக்கிறார். அனுவசியமாய் தப்படிப்பது ஆகாதென்று தேவ்பந்து உலமாக்கள் பகர்ந்திருப்பதையும் கவனியுங்கள். முற்காலங்களில் நிகா

ஹுகளில் சடங்குகள் விசேஷமாய் இருப்பதில்லை. நிகாஹுகளில் முக்கியஸ்தர்கள் மட்டுந்தான் கூடுவார்கள். அது காரணத்தால்தான் பிரபல்லியப்படுத்துவதற்காகத் தப்படியுங்கள், என்று நபிகள் நாயகம் (ஸல்) திருவுளமானார்கள்.

பாடிக்கொண்டு தப்படிப்பதை ஆகாதென்று தேவ்பந்து உலமாக்கள் கூறியிருக்கிறார்கள். நாம் மேலே எழுதியுள்ள உலமாக்களின் பத்வாவும், தேவ்பந்து உலமாக்களின் பத்வாவும் ஒற்றுமையாகிவிட்டது. இதற்கு மாற்றமாக M. அப்துல்கனிய்யி சாஹிபின் தப்பான பத்வாவை நிராகரிக்க வேண்டியது அவசியமாகி விட்டது.

தப்புகள் அடிப்பதும், மௌலானா அஷ்ரப் அலிஹஜ்ரத் அவர்களின் பத்வாவும்.

நிகாஹில் தப்புகள் அடிக்கும் விஷயமாய் மௌலானா அஷ்ரப் அலி ஹஜ்ரத் அவர்களிடத்தில் அடியில் வருமாறு வினவப்பட்டது :—

சுவால்

சில வாலிபர்கள் தப்படிக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறாகள். நிக்காஹு இரவு, அரபி, ஹிந்தி, தமிழ் பாடல்களைப் பாடிக்கொண்டு அதற்குத் தோதாய்த்தப்படிக்கிறார்கள். தெருத் தெருவாய்ச் சுற்றுகிறார்கள். அதற்காகக்கூலியும் வாங்குகிறார்கள். இத்தகைய செய்கை ஹனபிய்யாக் களிடத்தில் ஆகுமா? ஆகாதா? கற்றறிந்த உலமாக்களே! இதனைபயான் செய்து நற்கூலி பெற்றுக் கொள்வீர்களாக.

இதற்குத் தரமாக மௌலானா அஷ்ரப் அலி ஹஜ்ரத் அவர்கள் அடியில் காணும் ஜவாபை எழுதியனுப்பியிருக்கிறார்கள் .—

ஜவாபு.

இச்செய்கை ஜாயிஸ் ஆகமாட்டாது. இதற்காகக் கூலி வாங்குவதும் கொடுப்பதும் ஆகாது, யாதொரு சட்டமில்லாமல் (தாளக் கட்டில்லாமல்) வெறும் தப்பை அடித்து விடுவது மட்டுமாகும்.

(எழுதியவர்)
"அஷ்ரப் அலி" அபல்லாஹுஅன்ஹு
29-றபீஉல் அவ்வல் ஹி 1344

மௌலானா அஷ்ரப் அலி ஹஜ்ரத்தவர்கள் பல பிக்ஹுகிதாப்களின் ஆசிரியர். அவர்களின் பத்வாவையும் கவனியுங்கள். பாடிக்கொண்டு அதற்குத் தோதாய்த் தாளம்போட்டு தப்படிப்பது ஆகாதென்று வரைந்திருக்கிறார்கள். தப்பை அடிக்கவேண்டுமானல் தாளம்

போடாமலும் பாடாமலும் அடிக்கவேண்டுமென கூறியிருக்கிறார்கள். இது தான்புகஹாக்கள் கூறியதன் முடிவான தீர்மானம்.

நமது தேசத்திலோ தப்படிப்பவர்கள் "தஅலீம்கானா" ஏற்படுத்தி அதில் தப்படிக்கக் கற்றுகொள்ளுகிறார்கள். தேர்ச்சி பெற்றபின் வெளியில் தப்படிக்கக் கிளம்புகிறார்கள். எவ்வளவு சுத்தமாய் தாளம் போட்டார்களோ அவ்வளவுக்குக் கூலியும் கூடுதலாய் கொடுக்கிறார்கள். காதுக்கினிமையாய் தாளம் போட்டடிக்கவேண்டுமென்பதுதான் இவர்களின் கருத்தேயன்றி நிகாஹை பிரபல்யபடுத்துவதற்கல்லவென்பது புலனாகக்கிடக்கின்றது. நிகாஹைப் பிரபல்யபடுத்துவதற்கென்றால் ஷரீ அத்தில் கூறியுள்ளபடி தப்பை தட்டுவதுமட்டும் போதாதா? அதற்காக தாளம்போட்டு பாடவேண்டிய அவசியமொன்றுமில்லை. நிகாஹு விஷயத்தில் இராகம் பாடும் விதமாய் அடிக்கக்கூடாதென்று புகஹாக்கள் குறிப்பாய் எழுதியிருந்தும் அவைகள் ஒன்றையும் கவனியாமல் புதக்குடி உலமாக்கள் பாடிக்கொண்டு தப்படிப்பது ஆகுமென்று பத்வாக் கொடுத்தது தவறல்லவா?

முஸ்லிம் சகோதரர்களே! இவ்வாகாத செய்கைகளை விட்டும் உங்கள் நிக்காஹு மஜ்லிசுகளைப் பரிசுத்தமாக்கி வையுங்கள்.

முஸ்லிம்களே! இத்தகைய தீத்தொழில் நமது வாலிபர்களிடத்தில் இருந்து வருமாயின் பிற்காலத்தில் இதைவிட அநாகரீகமான செயல்கள் ஏற்பட்டுவிடும். ஆகையால் அவர்களை விலக்கவேண்டியது ஊர் தலைவர்கள் மீதுள்ள கடமையென்பதை உணரவேண்டியது. வல்லநாயன் எல்லோருக்கும் தவ்பீக் செய்வானாக. ஆமீன்.

கூத்தாநல்லூர் ஜம் இய்யத்துல் உலமா சபையாரால் எழுதப்பட்டது.

சின்னபள்ளி கூத்தாநல்லூர் 24-10-25	வெளியிட்டவர் கோ. மு. முகமது காசீம்.

அல்லாஹ்வுக்கு ஒன்றையும் சமமாக்காதீர்கள்.

முஸ்லிம்காள்!

சமீபத்தில் வெளிவந்த "இஸ்லாம்மித்திரன்" அநுபந்தமொன்றில் காவி, களுவல்லை, முஹம்மது ஹாஜியார் அப்துர் ரஹ்மான் அவர்களால் வியாசம் ஒன்றெழுதப்பட்டிருந்தது. அதில் எமது பரிசுத்த குர்ஆன் ஷரீப் எந்தப்பாஷையில் வெளிவந்துள்ளதோ—எமது நபிகள்பெருமானார் (ஸல்) எந்தப் பாஷை பேசுபவர்களாயிருந்தார்களோ அந்த அறபுப் பாஷையைக் கற்று, திருநபி (ஸல்) அவர்களின் பரிசுத்த ஷரீஅத்தைக் காப்பாற்ற இடுப்புக் கட்டி நிற்கும் சிறப்புவாய்ந்த உலமாக்களைக் கண்ணியக் குறைவாய் எழுதப்பட்டிருந்தது மன்றி நபிமார்களின் வாரிஸுகளான அந்த உலமாக்களால் கடுமையாக

மறுக்கப்பட்டுவரும் "உஜூமுத்தின், கலிமத்துல் ஹக்கு, துஹ்பத்துல் முர்ஸலா" என்னும் கிரந்தங்களை அளவுகடந்து அதிகமாய்த் துதிக கப்பட்டு மிருந்தது. அதைப் படித்த எமக்குண்டான ஆச்சரியத் திற்கு அளவுகிடையாது. அக்தக்ஷணமே மார்க்க அறிஞரும், பிரபல வர்த்தகரும், சேலம் செவ்வாய்ப் பேட்டை வாசியும், "சாலிக்" என்னும் புனைப் பெயருடையவருமான எமது அன்பார்ந்த நண்பருக்கு அவ்வியாசத்தை அனுப்பி ஓர்கடிதமும் வரைந்தோம். அன்னார் பிதிலாக 31-1-26ல் அடியிற்காணும் கடிதத்தை எமக்கனுப்பியுள்ளார். அதை நண்பர்கள் கவனத்துடன் வாசிப்பார்களாக. கடிதம் வரு மாறு ;—

தாங்கள் அனுப்பியதுண்டுப் பிரசுரம் கிடைத்தது. 9-1-26ல் காலி, களுவல்லையிலிருந்து முஹம்மது ஹாஜியார் அப்துர்ரஹ்மான் என்பவரால் உஜூமுத்தீனைப் பற்றி எழுதப்பட்ட வியாசத்துக்கு 27-1-26ல் ஈரோடு, தாஜுல் இஸ்லாமுக்கு ஒரு மறுப்புக் கடிதம் எழுதியிருக்கிறேன். அது பிரசுரமாகக் கூடும். முன்னமே ஹாஜியார் அவர்கள் இப்படி கொத்த வியாசம் எருதியிருக்க மாட்டார்களென்றுக் நான் நினைத்ததற்கிணங்கத் தாங்களும் கடிதத்தில் சைக்கினை செய் திருக்கிறீர்கள்.

1. கல்வத்து நாயகம் (றஹ) அவர்கள் பெயரை வைத்து ஒருவர் அஹ்மது கபீர் உஜூமுத்தீனை வெளியிட்டது போல் தான் ஹாஜியார் அவர்கள் பெயரைவைத்து யாரோ ஓர் பேதையான மனிதர் இந்த வியாசத்தையும் வெளியிட்டிருப்பார்போலும். அல்லாஹுதஆலா அவருக்கு நல்லறிவையும், நமக்கு தரக்கியையும் கொடுக்க வேணும்.

2. முஸ்லிம் அத்வைத மூலமொழியைப் பற்றியும், உஜூமுத் தீனைப் பற்றியும் இந்தியாவிலுள்ள உலமாக்களால் குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஃ, கியாஸ், முஹக்கிகீன் களாகிய ஸூபியாக்களின் கொள்கை இவைகளைக் கொண்டு அறபிப் பாஷையில் (மறுப்புப்) பத்வாக்க ளும், ஒரு ரிஸாலாவும் தயார் செய்யப்பட்டு இவ்விடத்திய (தென னிந்திய) உலமாக்களாலும், வட இந்தியாவில் தாறுபஹ்வன், சஹா ரன்பூர், தேவ்பந்து முதலிய இடங்களிலுள்ள ஹகாயிகுடைய இல் மில் தேர்ச்சிபெற்ற உலமாக்களாலும் கையெழுத்துச் செய்யப்பட்டு வருகிறது. இன்ஷா அல்லாஹுதஆலா, கூடிய சீக்கிரம் ஷை பிரதி கள் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டு ஈரோடு, தாஜுல் இஸ்லாம் மாறலாயும், அவ்விடம் காலியில் இதற்காக ஏற்பட்டிருக்கும் சங்கத் தார்கள் மாறலாயும் வெளிவரும். இவைகளைச் சேகரஞ் செய்து காலஞ்சென்ற முஸ்லிம் அத்வைத மூலமொழியின் ஆசிரியர் (ஜனாப் மௌலவி) நெல்லிகுப்பம் அப்துர்ரஹ்மான் ஸாஹிபு (அன்னாருக்கு அல்லாஹ் மக்பிரத்துச்செய்வானாக) அவர்களுக்கும் எனக்கும் நாளது வரையில் நடந்துவந்த சிலமுக்கியமான கடிதங்களையும் புஸ்தகரூப மாக அச்சிட்டு வெளிப்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அல் லாஹுதஆலா அவனுடையமர்ஜிக்கு நேர்பாடாக இந்தக் காரியத்தை முடிவுபெறச் செய்வானென்று ஆதரவு வைக்கிறேன்.

(தொடரும்.)